Registered as a news paper.
பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 10 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 20 (24.01.2003) வெள்ளிக்கிழமை இதழ் : 115

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email: thangan 672002 @ yahoo.com
T.P. - 021-2222588
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
பிரதான வீதி, சித்தன்கேணி.
Enrol your Children for Better results
சிறந்த பெறுபேற்றுக்கு உங்கள் பிள்ளைகளை சேருங்கள்
(சி-474)



கொழும்பில் நேற்று நடந்த வட – கிழக்கு புனரமைப்புப் பற்றிய வெளிநாட்டுத் தூதர்களுக்கான கூட்டத்தில் பேனாட், வெஸ்பேர்க், ஜோய் மகேஸ்வரன், செல்வின்.

## மாலைதீவு சிறையிலுள்ள சிங்களவரை விடுவிக்க பிரபாகரன் உதவ வேண்டும்

### ஜனாதிபதி, பிரதமர் கைவிரித்தபின் பெற்றோர் கோரிக்கை

(கொழும்பு நிருபர்)

மாலைதீவுச் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 35 இலங்கையர்களையும் விடுவிக்க விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் உதவவேண்டும் என்று தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் பெற்றோர் பாதுகாவலர் அமைப்புக் கேட்டுள்ளது.

இந்த அமைப்பின் தலைவரான பீற்றர் முதலிகே கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இத்தகவலை தெரிவித்தார்.

மாலைதீவு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 35 பேரையும் விடுவிக்க உதவுமாறு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு முறையிட்டும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே, புலிகள் இவர்களை மீட்டுத்தர உதவவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். இது தொடர்பாக புலிகளுக்கு கடிதம் அனுப்பப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மாலைதீவுச் சிறைகளில் 10 தமிழர், முஸ்லிம்களும், ஆறு பெண்களும் இருப்பதாக பீற்றர் முதலிகே மேலும் தெரிவித்தார்.

## வட-கிழக்கு புனரமைப்புத் திட்டங்கள்

# வெளிநாட்டுத் தூதுவர்களிடம் அரசு-புலிகள் நேரில் விளக்கம்

### விண்ணாணம் விநாசியார்



எத்தின பேர ஆட்டிப்படைச்சவர் இப்ப அடைபட்டுப்போறார் கண்டியளோ...

## நோர்வே ஏற்பாட்டில் கொழும்பில் முக்கிய சந்திப்பு

(நமது நிருபர்)

**யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வட-கிழக்குப் பகுதிகளில் சிறான் மேற்கொள்ளவுள்ள புனரமைப்பு மனிதாபிமானத் திட்டங்கள் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் - கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் இராஜதந்திரிகளுக்கும் அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் நேரில் விளக்கிய முக்கிய கூட்டமொன்று நேற்று கொழும்பில் நடைபெற்றது.**

நோர்வேத் தூதரகத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கூட்டத்தில்- விடுதலைப் புலிகளும் அரசாங்கத் தரப்பும் இணைந்து வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு, இதுவரை மேற்கொள்ளப்பட்ட புனர்வாழ்வு - புனரமைப்புப் பணிகளுக்கான தயார் படுத்தல்கள் பற்றியும், எதிர்காலத் திட்டமிடல்கள் பற்றியும் விளக்கமளித்தனர்.

நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தலைமையில் - விடுதலைப் புலிகளின் சார்பில்- தமிழர் புனர்வாழ்வுக்கழக அனைத்துலக இணைப்பா

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த கட்டப் பேச்சுக்கள் இரண்டு நாட்களே நடக்கும்

### நோர்வே உத்தியோக பூர்வமாக அறிவிப்பு

(ஒஸ்லோ)

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான அடுத்த கட்டச் சமாதானப் பேச்சுக்கள் இரண்டு நாட்களே நடைபெறும் என்று நோர்வே அரசாங்கம் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இது தொடர்பாக நோர்வே அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில், புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தின் உடல் நிலையைக் கருத்திற்கொண்டே சந்திப்புக்கள் நடைபெறும் இடத்தை ஐரோப்பாவிற்கு மாற்றவும் பேச்சுக்கள் நடைபெறும் காலத்தை இரண்டு நாட்களாகக் குறைக்கவும் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை- மார்ச் மாதம் நடுப்பகுதியில் ரோக்கியோவில் நடைபெறவுள்ள ஆறாவது கட்டப் பேச்சுக்களுக்கு முன்பாக கலாநிதி பாலசிங்கம் வன்னிக்குச்சென்று, விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனைச் சந்தித்துப் பேசுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐரோப்பாவில் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு இடத்தில் எதிர்வரும் 7ம்,8ம் திகதிகளில் இப்பேச்சுக்கள் நடைபெறும். லண்டனில் இருந்து அன்ரன் பாலசிங்கம் இலகுவாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விடைபெறுகிறார் ஹொவ்டே ரெலவ்சன் புதிய தலைவர்

(ஒஸ்லோ)

இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் பணியிலிருந்து ஜெனரல் புறூவ் ஹொவ்டே விலகிச் செல்லவுள்ளதாக நோர்வே அரசாங்கம் அறிவித்துள்ளது.

இவரது இடத்துக்குப் புதிய தலைவராக மேஜர் ஜெனரல் ட்ரைகெவ் ரெலவ்சன் (Tryggve Tellefsen) பதவியேற்கவுள்ளார். இவர், எதிர்வரும் பெப்ரவரி அல்லது மார்ச் மாதம் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 'ராகிங்' செய்தியை நிரூபிக்காத பத்திரிகை

# பகிஷ்கரிப்பு வெற்றியென மாணவர்கள் அறிவிப்பு

ராகிங் குறித்து வெளியிட்ட செய்தியை குறித்த பத்திரிகை நிறுவனம் இதுவரை நிருபிக்காததால், பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்பு போராட்டம் வெற்றி பெற்றுள்ளது. இதனால் பகிஷ்கரிப்புப் போராட்டத்தினை இடைநிறுத்துவதென்றும்,

குறிப்பிட்ட பத்திரிகை நிறுவனத்துக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதெனவும் பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக அனைத்துப்பீட மாணவர்களுக்குமான கூட்டம் நேற்றுக்காலை நடைபெற்றது. இக் கூட்டத்திலேயே இத்தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

குறிப்பிட்ட செய்தியை பத்தி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ரத்வத்த தொடர்ந்து சிறையில் பிணை மனு நிராகரிக்கப்பட்டது



சிறைக்கு கொண்டு செல்லப்படும் ரத்வத்த

கண்டி - உடதலவின்ன படுகொலை தொடர்பான வழக்கில் முதலாவது பிரதிவாதியான முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த பிணையில் செல்ல உயர் நீதிமன்றம் அனுமதி மறுத்திருக்கின்றது.

ஜெனரல் ரத்வத்த சார்பாக ஆஜரான சட்டத்தரணி- பிரதிவாதியின் தேகாரோக்கியம் சிறந்ததாக இல்லை, அவரைத் தடுத்து வைத்திருப்பது உசிதமானதல்ல என வாதிட்டபோதும் நீதிமன்றம் இத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

அத்துடன்- ரத்வத்தையின் மகனான லொகான் ரத்வத்தையின் பிணை மனுவும் நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு விசாரணைகள் எதிர்வரும் திங்கட்கிழமை உயர் நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளன.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
J/F 021 - 2223916, 0777 - 517019
01-505632, 074-612656, 01-390128
(சி-518)

# 117 ஓட்டங்கள் பெற்றிருந்த இங்கிலாந்தை 12 ஓவர்களில் அவுஸ்திரேலியா மடக்கியது

வி.பி. முக்கோணக் கிரிக்கெட் தொடரின் முதலாவது இறுதி ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி 10 விக்கட்டுக்களால் இங்கிலாந்து அணியைத் தோற்கடித்தது.

சிட்னியில் நேற்று நடந்த போட்டியில், இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. இங்கிலாந்து அணியினர் 45 ஓட்டங்கள் எடுத்திருநதபோது, ஆறு விக்கட்டுக்களை இழந்து மோசமான நிலையில் இருந்தனர். எனினும், பின்னர் வந்த ஆட்டக்காரர்கள் ஓரளவு தாக்குப்பிடித்து ஆடினர். 41 ஓவர்களில் 117 ஓட்டங்களைப் பெற்று இங்கிலாந்து அணி அனைத்து விக்கட்டுக்களையும் இழந்தது.

அவுஸ்திரேலியா சார்பில் பந்து வீசிய பிக்கெல் 4 விக்கட்டுக்களையும், பிரட் லீ 3 விக்கட்டுக்களையும், வில்லியம்ஸ் 2 விக்கட்டுக்களையும், ஷேன் வோர்ன் ஒரு விக்கட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து ஆட்டத்தை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் அடம் கில்கிறிஸ்ட்டும் மத்யூ ஹேடனும் இங்கிலாந்து வீரர்கள் வீசிய பந்துகளை அடித்து விளாசினர்.

இதனால் 12.2 ஓவர்கள் நிறைவில், வெற்றி இலக்கான 118 ஓட்டங்களை அவுஸ்திரேலியா பெற்றது.



வெற்றிக் களிப்பில் அவுஸ்திரேலிய வீரர்கள்.

கில் கிறிஸ்ட 37 பந்துகளில் 15 பவுண்டரிகளுடன் 69 ஓட்டங்களைக் குவித்தார். ஹேடன் 37 பந்துகளில் ஆறு பவுண்டரிகள் ஒரு சிக்ஸருடன் 45 ஓட்டங்களைப் பெற்றார்.

## செய்திப் படங்கள்



ஐவரிகோஸ்ட்டில் தொடரும் மோதல்கள் அங்கு நடைமுறையிலுள்ள அமைதி நிலையை சிதைத்து விடுமென அஞ்சப்படுகிறது.

ஐவரிகோஸ்ட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான சந்திப்பொன்று பாரிஸில் நடைபெற ஏற்பாடாகியிருக்கும் நிலையில் இத்தாக்குதல்கள் பாதிக்குமெனவும் தெரிவிக்கப்படுகிறது.



துருக்கியில் கூடிய அரபு நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் ஈராக் மீதான போரைத் தவிர்ப்பது பற்றி ஆராய்ந்துள்ளனர்.

துருக்கி, எகிப்து, ஈரான், சிரியா, சவூதி அரேபியா, ஜோர்தான் ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர்.


நிறைஞ்சனாஸ் சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

இன்றுமுதல் விஜய், சிந்து நடித்த

நெஞ்சினிலே

வெள்ளி. சனி. ஞாயிறு இரவு 8.45 (பு.நே.)

TOMB RAIDER

(சி-397)

ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

விஜய், ஸ்நேகா நடித்த




வசீகரா

10.30, 2.30, 6.00, 9.30 (சி-398)

ரிக்கற்றுக்களை முன்பதிவு செய்துகொள்ளவும்.


# அதிர்ஷ்ட வாரம் 24.01.2003 - 30.01.2003

### மேடம்

அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்

பொருள்வரவைக் கொடுக்கும், எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும், இருப்பினும் மனதில் இனம் தெரியாத ஒரு சஞ்சலம் இருக்கும் இடையிடையே உடல் உபாதைகளைக் கொடுக்கும், வியாபாரிகளுக்குத் தொழிலில் மந்தமான நிலை காணப்படும், சினேகிதரால் நன்மை கிடைக்கும், பெண்களுக்கு நல்ல மகிழ்ச்சியான வாழ்வு கிடைக்கும், மாணவருக்கு கல்வியில் ஊக்கமும் முன்னேற்றமும் காணப்படும்.

### இடபம்

கார்த்திகை 2, 3, 4 ஆம் பாதம், ரோகிணி, மிருகசீரிடம், 1, 2ஆம் பாதம்

சம்பந்தா சம்பந்தமில்லாமல் மனதில் குழப்பங்கள் காணப்படும், தனித்துவிடப்பட்ட நிலை, புத்திக் குறைவைக் கொடுக்கும், வியாபாரிகளுக்கு தொழிலில் நல்ல முன்னேற்றமுண்டு, குடும்பப் பெண்களுக்கு உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும், குடும்பத்தில் புத்திரரால் கலகம் உண்டாகும், மாணவருக்குக் கல்விச் சிறப்பு உண்டு, எதிர்பாராத முன்னேற்றத்தைக் கொடுக்கும்.

### மிதுனம்

மிருகசீரிடம், 2, 3ஆம் பாதம் திருவாதிரை, புனர்பூசம், 1, 2, 3 ஆம் பாதங்கள்

தேகசுகம் அடிக்கடி பாதிக்கப்படும், தேவையில்லாமல் வீண்வம்பில் மாட்டிக்கொள்வீர்கள், உறவினர், நண்பர்களுடன் மனக்கசப்பு உண்டாகும், வியாபாரிகளுக்குத் தொழிலில் நல்ல இலாபம் கிடைக்கும், வர வேண்டிய பணம் தானாகத் தேடி வரும், குடும்பப் பெண்களுக்கு உறவினரை விட்டுப்பிரியவேண்டிவரும், பிரிவுத் துயர் வாட்டும், மாணவருக்குக் கல்வியில் சமபலன் உண்டு.

### கர்க்கடகம்

புனர்பூசம், 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்

இடமாற்றத்தைக் கொடுத்து அலைச்சலைக் கொடுக்கும், வரவுக்கு அதிக செலவைக்கொடுக்கும் ஆனால், பொருள் வரவிற்கு இடமுண்டு. வியாபாரிகளுக்கு நல்ல இலாபத்தைக் கொடுக்கக்கூடிய வாரமாக இருக்கும், அதிக முதலீடுகள் செய்யக் கூடிய காலம், குடும்பப் பெண்களுக்குப் பொன்பொருள் சேரக்கூடிய பலனுண்டு, பணப்புழக்கம் அதிகமாக இருக்கும், மாணவருக்குக் கல்வியில் முன்னேற்றமுண்டு.

### சிங்கம்

மகம், பூரம், உத்தரம், 1ஆம் பாதம்

வெளிநாட்டு உதவிகள் தாராளமாகக் கிடைக்கும், குடும்பத்தில் சுபகாரியங்கள் நிகழும், பணச்செலவு பொருள் இழப்பையும் கொடுக்கும், மனப்பயம் இருக்கும், இனம்புரியாக் கவலை இருந்துகொண்டே இருக்கும், வியாபாரிகள் பெரியளவில் இலாபத்தை எதிர்பார்க்க முடியாது, குடும்பப் பெண்களுக்கு குடும்பத்தவரின் ஆதரவுண்டு, திருமண முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டுவர்.

### கன்னி

உத்தரம், 2, 3, 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை, 1, 2ஆம் பாதம்

வெளியூர்ப் பிரயாணங்களால் நன்மையுண்டு, தொழில் சிறப்பையும் முன்னேற்றத்தையும் கொடுக்கும், தேகசுகம் நன்றாக இருக்கும், மனதில் மகிழ்ச்சி நிலவும, வியாபாரிகளுக்குப் பொருள் வரவைக் கொடுக்கும், அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியும், குடும்பப் பெண்களுக்கு தேக ஆரோக்கியம், சந்தோஷம், சுபகாரியங்கள் நடத்தல் போன்ற நல்ல விஷேசங்களுக்கு இடமுண்டு, மாணவர்கள் கல்வியில் முன்னேற்றமுண்டு.

### துலாம்

சித்திரை 3, 4ஆம் பாதம், சுவாதி, விசாகம், 1, 2, 3 ஆம் பாதம்

பகைவர் தொல்லைகள் கொடுப்பர், தேகசுகம் பாதிக்கப்படும், பொருள் இழப்பைக் கொடுக்கும், பிரயாணக் கஷ்டம், வரவுக்கு மிஞ்சிய செலவைக் கொடுக்கும், வியாபாரிகளுக்குப் பொருள் அழிவைக் கொடுப்பதுடன் நட்டத்தையும் கொடுக்கும், குடும்பப் பெண்களுக்கு புத்திரரால் கவலையைக் கொடுக்கும், மாணவருக்கு உற்சாகம் இராது, சோர்வு, நித்திரை அதிகமாக இருக்கும்.

### விருச்சிகம்

விசாகம், 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை

பெரியோரின் ஆசீர்வாதம் கிடைக்கும், நல்ல வாழ்வைக் கொடுக்கும், நல்ல செய்தி கிடைக்கும், பண வரவுக்கிடமுண்டு, வியாபாரிகளுக்கு முதலீட்டிற்குரிய லாபம் கிடைக்கும், தானதர்மம் செய்தல், நல்ல காரியங்களுக்கு பணச் செலவைக் கொடுக்கும், குடும்பப் பெண்களுக்கு பூமி, வாகனம் போன்றவற்றால் நன்மையுண்டு, மாணவர் கல்வியில் முன்னேற்றமுண்டு.

### தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்

மனதில் இனம்புரியாத வேதனை காணப்படும், தொழிலில் அதிக கவனம் செலுத்த வேண்டும், கூட இருந்தே கெடுதல் செய்வார்கள், தேக ஆரோக்கியம் பாதிக்கப்படும், வியாபாரிகளுக்கு பொருள் நஷ்டத்தைக் கொடுக்கும், போட்டி அதிகம் இருக்கும், குடும்பப் பெண்களுக்கு வீட்டில் அமைதி இராது, பணக்கஷ்டம் இருக்கும், மாணவர்களுக்கு உற்சாகம் இராது, கல்வியில் சமபலனுண்டு.

### மகரம்

உத்தராடம், 2, 3, 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதம்

அதிக பிரயாசம், நல்ல லாபம் உற்சாகம் குடும்பத்தில் சுபகாரியங்கள் நடத்தல், பெண்களால் அதிக நன்மையுண்டு, வீடு, வாகனம் இவற்றினால் நன்மையுண்டு, இடையிடையே தேக சுகம் பாதிக்கப்படும், வியாபாரிகளுக்கு நல்ல லாபத்தைக் கொடுக்கும், குடும்பப் பெண்களுக்கு மகிழ்ச்சியையும் கணவரின் ஆதரவையும் கொடுக்கும், மாணவர்கள் உற்சாகத்துடன் கல்வியை தொடருவர்.

### கும்பம்

அவிட்டம், 3, 4ஆம் பாதம், சதயம், பூரட்டாதி, 1, 2, 3ஆம் பாதம்

பொருள் சேதம், பொருள் இழப்பைக் கொடுக்கும், தேக ஆரோக்கியம் கெடும், மனச்சோர்வு இருக்கும், உறவினர், நண்பர்களுடன் பகையைக் கொடுப்பதுடன் மனதில் பயத்தையும் கொடுக்கும், வியாபாரிகளுக்கு தொழிலில் நன்மையைக் கொடுக்கும், எதிர்பார்த்த லாபம் கிடைக்கும், பெண்ணுக்கு குடும்பத்தில் நோயின் தாக்கம் காணப்படும், அமைதி இராது, மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் உண்டு.

### மீனம்

பூரட்டாதி, 4ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும், பெரியோர் சந்திப்பினால் மனம் சந்தோஷம் அடையும், பொருள் வரவு பணவரவுக்கு இடமுண்டு, வியாபாரிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும், போட்டி இருக்கும், வெற்றி கிடைக்கும் பெண்களுக்கு நல்ல வாழ்வு கிடைக்கும், மாணவருக்கும் அதிக முன்னேற்றம் காணப்படும்.

பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்


## பதவி வெற்றிடம்

வெள்ளவத்தை, கொழும்பு - 06 இல் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள உள்ளூர் விமானசேவையில் ஈடுபட்டுக்கொண்டிருக்கின்ற ஸ்தாபனத்துக்கு முகாமையாளர், கணக்காளர், விற்பனையாளர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், அலுவலக உதவியாளர்கள், களஞ்சியப் பொறுப்பாளர்கள், பாதுகாவலர்கள் தேவைப்படுகிறார்கள்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் உள்ளூர், வெளியூர் பயணிகள், பயணச்சீட்டுக்களைக் கையாள்வதில் திறமையும், முன்னனுபவமும் பெற்றிருப்பதுடன் மும்மொழிகளில் தேர்ச்சி பெற்றிருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

*விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:* (சி-522)

**விளம்பர இல.07, C/O நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்**

## பணி சிறப்படைய வாழ்த்துகின்றோம்

யாழ். வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி யாழ். மாவட்ட மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக இன்று 24.01.2003 இல் பதவி ஏற்கும்

**திருமதி செல்வராணி மகாலிங்கம்**

அவர்களின் கல்விப் பணி மேலதிக மாகாணக் கல்விப் பணிமனையிலும் சிறக்க வாழ்த்துகின்றோம்.

- எந்திரியும் பாடசாலைக் கட்டடப் பகுதியினரும்.

(சி-521)

## வேலை வாய்ப்பு

பருத்தித்துறையில் இயங்கிவரும் தும்புக்கண்ணாடி இழைப் படகு உற்பத்தி நிலையத்தில் பணிபுரிவதற்கு, பைவர்கிளாஸ் வேலை தெரிந்தவர்களுக்கும், பயிலுநர்களுக்குமான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* கவர்ச்சிகரமான சம்பளம்,
* உணவு மற்றும் தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி:- 10.02.2003

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-
விளம்பர இல. 06,
c/o நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-520)

## வாசகர்களே, வாடிக்கையாளர்களே!

நமது ஈழநாட்டில் விளம்பரம் செய்வதற்கு உங்களுக்கு அருகிலேயே இனி எமது விளம்பர முகவர்.

## நமது ஈழநாடு விளம்பர முகவர்

கோண்டாவில்

எஸ்.நிர்மலன்
லக்ஷ்மி தொலைத்தொடர்பு நிலையம்
கே.கே.எஸ். வீதி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

தொலைபேசி இல.
222-3621



# கூட்டமைப்பு புலிகளுடன் சேர முடிந்தால் ஜே.வி.பியுடன் நாம் ஏன் சேர முடியாது?

## பொ.ஐ.முன்னணியின் மங்கள சமரவீர கேட்கிறார்

(கொழும்பு)

நாம் ஜே.வி.பி.யுடன் இணைவது பற்றி எவரும் கேள்வி கேட்கமுடியாது. தமிழ்க்கூட்டமைப்பு விடுதலைப் புலிகளுடன் சேர்ந்தியங்க முடியுமாக இருந்தால் - நாங்கள் ஜே.வி.பி.யுடன் ஏன் இணைய முடியாதென பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய தலைவரும் முன்னாள் அமைச்சருமான மங்கள சமரவீர கேள்வியெழுப்பியுள்ளார்.

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பி.க்கும் இடையிலான உறவு பற்றி - தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியிட்ட விமர்சனத்திற்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கும்போது -

தமிழர் விடுதலைக் கூட்டணியால் வெளியிடப்பட்ட கருத்துக்கள், அவர்கள் விடுதலைப் புலிகளின் பணயக்கைதிகளாக ஆளாகியிருப்பதைக் காட்டுகின்றது.

படிப்படியாகத் தனது ஆதரவை இழந்துவரும் ஐக்கிய தேசியக் கட்சி, மிகவிரைவில் நாடாளுமன்றத்தில் சிறுபான்மைக் கட்சியாகிவிடும்.

ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழர் விடுதலைக் கூட்டமைப்பும், பொதுஜன ஐக்கிய முன்னணி - ஜே.வி.பி. கூட்டமைப்பைக் கண்டு அஞ்சுகின்றன.

இன்று தமிழர் கூட்டமைப்பு மட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்கவும் விடுதலைப் புலிகளின் கைப்பொம்மையாகி விட்டார் என்றும் சமரவீர மேலும் தெரிவித்தார்.

## தரமுயர்த்தப்பட்ட சனசமூக நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

வலி.தென்மேற்கு - மானிப்பாய் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட 76 சனசமூக நிலையங்களில், 56 சனசமூக நிலையங்கள் 'ஏ' தரம் கொண்ட சனசமூக நிலையங்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

மேற்படி ஏ - தரத்தில் தெரிவுசெய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கான கொடுப்பனவுக் கடிதங்கள் நேற்றுமுன்தினம் முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

இதுவரையில் 600 ரூபாவுக்கான கடிதங்களைப் பெறாதவர்கள் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்பாகப் பிரதேசசபை திட்டமிடற் பிரிவில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறு - மானிப்பாய் பிரதேச சபை உள்ளூராட்சி உதவியாளர் செ.ரமேஷ் அறிவித்துள்ளார்.

# அரசியல் தீர்வு குறித்து உறுதியான முடிவு பேச்சுக்களின்போது ஏற்படவில்லையாம்!

## ஜனாதிபதி சந்திரிகா விசனம் தெரிவிப்பு

நாட்டில் தற்போது நிலவும் சமாதானச் சூழலை நிரந்தரமாக்க வேண்டும் என்பதற்காகவே சமாதான நடவடிக்கைகளில் ஏற்படும் குறைபாடுகளைத் தான் தொடர்ந்தும் சுட்டிக் காட்டி வருவதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில், ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் ஜனாதிபதியின் மேற்கண்ட கருத்துக்களை முன்வைத்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பித்து ஒருவருடகாலம் பூர்த்தியான போதிலும், அரசியல் தீர்வு தொடர்பாக உறுதியான முடிவுகள் எட்டப்படாதது குறித்து ஜனாதிபதி விசனம் தெரிவிப்பதாகக் ஹரீம் பீரிஸ் சுட்டிக்காட்டினார்.

சிறுவர்களைப் புலிகள் இயக்கத்தில் சேர்ப்பது பற்றியும், சமாதானப் பேச்சுவார்த்தைகளின்போது அவசியம் கருத்திற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகள் யுத்தநிறுத்த உடன்படிக்கையை மீறி வருவதைச் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது - ஆராய்வது அத்தியாவசியம் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறியதாகக் ஹரீம் பீரிஸ் தெரிவித்தார்.

சிறுபான்மை இனத்தவர்களுக்கு ஏற்பட்டுள்ள உரிமை மற்றும் முக்கிய பிரச்சினைகளுக்கு மூலகாரணமாக அமைந்த விடயங்களுக்கும் தீர்வு காண வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்ததாகக் ஹரீம் பீரிஸ் குறிப்பிட்டார்.



நேற்றுமுன்தினம் வன்னி சென்றிருந்த சுவிற்சர்லாந்து நாட்டுத் தூதுவர் தலைமையிலான குழுவினர், அரசியற்துறைப் பொறுப்பாளருடன் பேச்சு நடத்துகின்றனர்.



பேச்சுக்களில் கலந்துகொண்ட சுவிற்சர்லாந்து தூதுவர் மற்றும் உயர் மட்டக் குழுவினரைப் படத்தில் காணலாம். இச்சந்திப்பில், புலிகளை தம் நாட்டுக்கு மீண்டும் விஜயம் செய்யுமாறும் இவர்கள் அழைப்பு விடுத்தனர்.

# ரத்வத்த பதவியில் இல்லாவிட்டால் உடதலவின்ன படுகொலை நிகழ்ந்திராது

## பிரதி சொலிசிட்டர் ஜெனரல் நீதிமன்றில் தெரிவிப்பு

பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக ஜெனரல் அனுருத்த ரத்வத்த பதவி வகித்திராவிட்டால், கடந்த பொதுத் தேர்தலின்போது உடதலவின்னையில் முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை இடம்பெற்றிருக்காது என்று பிரதி சொலிசிட்டர் ஜெனரல் பாலித்த பெர்ணான்டோ நீதிமன்றில் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் உயர்நீதிமன்றத்தில் உடதலவின்ன முஸ்லிம் இளைஞர்கள் படுகொலை சம்பந்தமான வழக்கிலே அவர் மேற்கண்டவாறு தமது வாதங்களை முன்வைத்தார்.

அவர் மேலும் நீதிமன்றில் தெரிவித்ததாவது, அனுருத்த ரத்வத்த தமக்கிருந்த அதிகாரங்களைப் பயன்படுத்தி, வாக்களிப்பதற்கு மக்களுக்குள்ள உரிமைகளைப் பறித்ததுடன், இராணுவத்தினரைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்தியிருந்தார். இதன்மூலம் தனது தேர்தல் தொகுதியில் வன்முறையும், பீதியும் ஏற்படுவதற்கு அவர் காரணமாக இருந்தார் எனத் தெரிவித்தார்.

# வெகு விரைவில் வெளிவரவுள்ள 'உப்பில் விளைந்த உதிரங்கள்'

கடற்புலிகளின் அனுசரணையுடன், விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பு, நிதர்சனம் நிறுவனத்துடன் இணைந்து தயாரித்துள்ள 'உப்பில் விளைந்த உதிரங்கள்' திரைப்படம் வெகுவிரைவில் திரையிடப்படவுள்ளதாகக் கடற்புலிகளின் வடமராட்சி அரசியற்துறையினர் தெரிவித்தனர்.

1998 ஆம் ஆண்டு பெப்ரவரி 26 ஆம் திகதி கடற்புலிகளின் கொமாண்டோக்கள் கிளாலி கடற்படைத்தளத்தின்மீது நடாத்திய தாக்குதலை மையமாக வைத்து இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இத்தாக்குதலை வழிநடத்திய கேணல் ராஜு"வின் நினைவாக வெளியிடப்படவுள்ள 'உப்பில் விளைந்த உதிரங்கள்' திரைப்படத்தைக் குயிலன் இயக்கியுள்ளார். பாடல்களை புதுவை இரத்தினதுரை இயற்றியுள்ளார் எனவும் தெரியவருகின்றது. (69)

# அரச ஊழியருக்கான சம்பள உயர்வு உடனடியாக நடைமுறைப்படுத்த முடியாது

## பின்வாங்குகிறார் நிதியமைச்சர் கே.என். சொக்ஸி

(கொழும்பு)

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிட்டாலும் அதனை உடனடியாக நடைமுறைப்படுத்த முடியாது என்று நிதி அமைச்சர் கே.என் சொக்ஸி தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நிலைக்கு அமைய இவ்வருட நடுப்பகுதியில் அரச ஊழியர்களுக்குச் சம்பள அதிகரிப்பொன்றை வழங்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

கடந்த வருட முடிவின்போது எய்தப்பட்ட 5.3 வீத பொருளாதார வளர்ச்சியைத் தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள முடிந்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

பொருளாதார வளர்ச்சி ஏற்படடால் அரச ஊழியர்களின் சம்பளம் நிச்சயமாக அதிகரிக்கப்படும் எனறும் அவர் தெரிவித்தார்.

# தொடர்ச்சியாகக் குறைந்துவரும் யுத்த நிறுத்த மீறல் முறைப்பாடுகள்

## கண்காணிப்புக்குழு அறிக்கை

அரசும் புலிகளும் செய்துகொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை மீறப்பட்டமை தொடர்பான முறைப்பாடுகளின் எண்ணிக்கை குறைந்து வருவதாக இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அறிவித்துள்ளது.

இது சமாதானத்தின் முன்னேற்றத்தை பிரதிபலித்துள்ளது என்றும், அந்தக்குழு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர்களை புலிகள் தமது இயக்கத்தில் சேர்த்துக்கொள்வது பற்றிய முறைப்பாடுகள் தொடர்ந்து கிடைத்து வருவதாகவும், இது கடநத மாதங்களைவிட மிகவும் குறைந்திருப்பதாகவும் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.

கடந்த டிசம்பர் மாதம் 142 நம்பத்தகுந்த முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

இதில் 118 முறைப்பாடுகள் புலிகளுக்கு எதிராகவும், 24 முறைப்பாடுகள் அரசாங்கப் படைகளுக்கு எதிராகவும் மேற்கொள்ளப்பட்டன. இது முன்னைய மாதங்களைவிட குறைவானது என்று கண்காணிப்புக் குழு அறிவித்துள்ளது.

### உலர் உணவு பெறுவோர் விபரம் மீளாய்வு

நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் உலர் உணவு பெறுபோர் விபர மீளாய்வு ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவு ரீதியாக நடைபெறுகின்றது. இதில் உதவி அரச அதிபர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் பொது அமைப்புப் பிரதிநிதிகளும் ஈடுபட்டு வருகின்றனர்.(113)

# சிறுவர் துஷ்பிரயோகக் காட்சிகள் ஹெலியின் ஒளிநாடாவில் இல்லை!

## எனினும் குற்றச்சாட்டுக்கள் நீங்கிவிடவில்லையாம்

(கொழும்பு)

பிரித்தானியத் தொலைக்காட்சித் தயாரிப்பாளரான மத்தியூ ஹெலியின் கொழும்பு இல்லத்தில் நடத்தப்பட்ட தேடுதலின்போது கைப்பற்றப்பட்ட ஒளிநாடாக்களில் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான காட்சிகள் எதுவும் இடம்பெற்றிருக்கவில்லை என்று தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் ஹரேந்திர டீ சில்வா தெரிவித்துள்ளார்.

ஒளிநாடாக்களில் இது தொடர்பான தடயங்கள் எதுவும் அகப்படாத போதும், இவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நீங்கிவிட்டதாகக் கருதிவிட முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, மத்தியூ ஹெலியின் வீடு அமைந்துள்ள பமுனுகம பொலிஸ் பிரிவுப் பொறுப்பதி காரி ஷெல்டன் றொட்றிகோ இதுபற்றித் தகவல் வெளியிடும்போது, தனக்குத் தெரிந்தவரையில் ஹெலியின் இல்லத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெற்றதாகத் தெரியவில்லை என்று தெரிவித்துள்ளார்.

# ஊடகங்களின் அவசரத்துக்குப் பேச்சுக்களை நகர்த்தமுடியுமா?

இன்று உலகத்தை ஆள்வது யார் என்று கேட்டால், அதற்குத் தரக்கூடிய



சரியான பதில் ஊடகங்கள் என்பதுதான். ஊடகங்கள்தான் இன்று எல்லாவகையிலும் உலகத்தை ஆண்டுவருகின்றன. எப்படித்தான் அர சியல்வாதிகளும், அதிகாரிகளும் விடயங்களைத் தீர்மானித்தாலும், அவற்றை மக்களுக்கு எடுத்துச் செல்பவை ஊட கங்களாகவே உள்ளன. மக்களுக்கு ஊடகங்கள் எதைச் சொல்கின்றனவோ அவைதான் ஈற்றில் உண்மையாகி விடுகின்றன. அந்தளவுக்கு இன்று எல்லாத்துறைகளிலுமே தீர் மானிக்கும் சக்தியாக ஊடகங்களே செயற்பட்டு வருகின்றன.

அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்குமிடையே தற்போது நடைபெற்றுவரும் சமா தானப் பேச்சுவார்த்தைகளிலும் ஊட கங்களின் இந்தச் செல்வாக்கை உணரமுடிகின்றது. பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே அந்தப் பேச்சுக்கள் தொடர்பான எதிர்பார்ப்புக்களையும், சந்தேகங்களையும், எதிர்வு கூறல்களையும் முனகூட்டியே ஊடகங்கள் செய்து விடுகின்றன. இதனால் ஒரு முற்கற் பிதத்துடன்தான் மக்கள் ஒவ்வொரு முறை பேச்சுக்களின் முடிவுகளையும் எதிர்பார்த்திருக்கின்றனர். இது ஒருவகையில் ஊடகங்களின் வழமையான செயற்பாடும்கூட.

**சடாயு**

ஆனால், இம்முறை அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே நடைபெற்ற நானகாம் கட்டப் பேச்சுக்களும், அதன் முடிவுகளும் ஊடகங்களின் இந்தச் செயற்பாடு தொடர்பான சில சந்தேகங்களை எழுப்பியுள்ளதுடன், ஊடகங்களிடம் மேலதிகப் பொறுப்பையும் அது வேண்டி நிற்பதாக உணர முடிகிறது. மக்களுக்குக் கருத்தை எடுத்துச் செல்வன என்பதுடன், மக்களிடையே கருத்துக்களை உருவாக குவனவாகவும் இருக்கும் சாதனம் என்றவகையில் ஊடகங்களுக்கு இருக்கவேண்டிய மேலதிகப் பொறுப் புணர்வை இம்முறை பேச்சுக்கள் அதிகம் வலியுறுத்தியிருப்பதாக உணரமுடிகிறது.

அரசு - புலிகள் நான்காம் கட்ட பேச்சுக்கள் ஆரம்பிப்பதற்கு முன் னதாகவே இம்முறை இந்தப் பேச் சுக்கள் தொடர்பில் பல்வேறு ஊகங் களும் வெளிப்படுத்தப்பட்டன. கடந்த சுற்றுப் பேச்சுகளின்போது இருந் ததைவிடவும் இம்முறை ஒரு வித அதிகபட்ச எதிர்பார்ப்புநிலை ஊட கங்களால் தோற்றுவிக்கப்பட்டிருந் தன. இதற்குக் காரணம், யாழ். குடா நாட்டில் அதியுயர் பாதுகாப்பு வல யங்களில் இடம் பெயர்ந்த மக்களை மீளக் குடியேற்றும் விவகாரத்தில் படையினருடன் புலிகளுக்கு ஏற்பட்ட முரண்பாடே.

அதியுயர் பாதுகாப்பு வலயத் தில் பொதுமக்களை மீளக்குடி யேற்ற அனுமதிக்க வேண்டுமாயின் புலிகள் ஆயுதங்களைக் களைய வேண்டும், தமது கனரகப் படை யணிகளைக் கலைக்க வேண்டும் என யாழ். குடாநாட்டின் படைத் தள பதி மேஜர் ஜெனரல் பொன்சேகா தன்னிச்சையாக விடுத்திருந்த கோரிக்கை ஏற்படுத்திய பதற்றம், நான்காம் கட்டப் பேச்சுக்களில் பிரதி பலிக்கும் என்றே பரவலாக எதிர்வு கூறப்பட்டது.

ஆனால், நிலைமை பல வழி களிலும் இதற்கு மாறாகவே அமைந் திருந்தமையைப் பேச்சுக்களின் இடையில் இருதரப்புக் குழுத் தலை வர்களும் வெளியிட்ட கருத்துக்க ளும், பேச்சுக்களின் முடிவும் தெளி வாகப் புலப்படுத்தியுள்ளன.

முதலாம் நாள பேச்சுக்கள் முடிந்து பேச்சுவார்த்தைக் குழுவினர் வெளியில் வந்ததும் அரசு தரப்புப் பிரதி நிதிகளின் தலைவரான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை முற்றுகையிட்ட ஊடகவியலாளர்கள் அனைவருமே அவசரமாகக் கேட்ட கேள்வி - பாது காப்பு வலய விவகாரத்தில் என்ன முடிவு எய்தப்பட்டிருக்கின்றது என்ப துதான். இதற்குப் பேராசிரியர் பீரிஸ் அமைதியாகவும், நிதானமாகவும் அளித்த தெளிவான பதில் ஊடகங் களின் பசிக்குத் தீனிபோடுவதாக அன்றி, ஊடகங்களிடம் ஒரு வித பொறுப்புணர்வை வேண்டுவதாகவே இருந்தது.

பலரும் எதிர்பார்த்ததுபோல பேச்சுவார்த்தைகளில் எதுவித பின்



னடைவும் ஏற்படவில்லை என்பதைத் தெளிவாக உரைத்த பேராசிரியர் பீரிஸ், பேச்சுக்கள் முறியும் அல்லது ஒருதரப்பு அதிலிருந்து விலகும் என்ற பேச்சுக்கே இடமில்லை. இந்த விவகாரத்தின் முக்கியத்துவத்தை இருதரப்புமே உணர்ந்து கொண்டுள் ளன. அதனை நாங்கள் இம்முறை பேச்சுக்களின் மூலம் தீரதது்க்கொள் வோம் என்று ஊடகவியலாளர்க ளுக்கு விளக்கமளித்தார்.

விடுவார்களா நமது ஊடகவிய லாளர்கள். அப்படியாயின் என்ன வித மான தீர்வு எட்டப்படும்?. என்ன கால அவகாசத்துக்குள் இது தீர்க்கப்படும்? அதிகாரப்பகிர்வு விடயத்தில் என்ன முடிவு எட்டப்பட்டுள்ளது? என்று கேள் விக் கணைகளால் போட்டுத் துளைத் தார்கள். இந்தச் சந்திப்பில் மட்டு மல்ல ஒவ்வொரு சுற்றுப் பேச்சின் முடிவின்போதும், பேச்சுக்களின் முடி வில் நடைபெற்ற ஊடகவியளாளர் மாநாட்டின்போதும் என, ஊடகவியலா ளர்கள் தமது கேள்விக் கணைகளைச் சம்பந்தப்பட்ட தரப்புக்களை நோக்கி ஏவிக்கொண்டே இருந்தனர்.

இலங்கைப் பிரச்சினையுடன் சம் பந்தப்பட்டிராத, அதில் அதிக தெளி வில்லாத சில வெளிநாட்டு ஊடகவி யளாளர்கள் விஷமத்தனமான கேள்வி களையும்கூடக் கேட்கத் தவறவில்லை.

*(தொடரும்)*

---



# குருஷேத்திரத்திலிருந்து ஈழம்வரை

நீண்டதொரு இடைவெளிகளின் பின்னர் பல புதிய உத்திகளுடன் "ஆர்கொலோ சதுரர்" என்ற நாட்டிய நாடகத்தினை நாடக அரங்கக் கல்லூரியினர் எதிர்வரும் ஞாயிற்



றுக்கிழமை இரு காட்சிகளாக யாழ்.பல் கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கிலே வழங்கவுள்ளனர். பிரபல நாடக ஆசிரியர் குழந்தை ம.சண்முகலிங்கத்தின் எழுத்து ருவை - திருமதி சாந்தினி சிவநேசன் நெறியா ள்கை செய்துள்ளார்.

இந்நாட்டிய நாடகம் பழைய தொன்மத் தினூடாகப் புதிய சமூக விடயத்தினை முன் னெடுப்பதற்காகப் பரதக் கலையைத் துணை கொண்டிருக்கின்றது. யாழ்ப்பாண நாடக அரங் கின் வரலாற்றிலே புதியதொரு அத்தியாயத் தினை இந்நாட்டிய நாடகம் ஆரம்பித்து வைத் துள்ளது என்றால் அது மிகையானதல்ல.

எம்மிடம் இருக்கும் பாரம்பரியத் தொன்மத் தினைப் பரதக்கலையின் வரையறைகள் மற் றும் நெறிமுறைகளுக்கு ஒத்திசைவாகத் தற் கால விடயத்தினைக் கையாள்வது என்பது அரங்கநெறிமுறையிலும் சரி- பரதக் கலையி லும் சரி-ஒரு பெருந்திருப்பு முனையாகும். மேலும் இத்திருப்புமுனையானது எதிர்காலத் தல் புதிய உத்வேகத்தினையும், உந்துதலையும் ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

இந்தவகையில் பரதக் கலையின் நெறி முறைகளுக்கூடாக நாடகம் எடுத்துச் செல்லப் படுகிறதா? அல்லது நாடகத்தின் நெறிமுறைக் கூடாக பரதம் எடுத்துச் செல்லப்படுகின்றதா என்பதனை அறியப் பார்வையாளராகிய நீங்கள் வரும் ஞாயிற்றுக்கிழமைவரை காத்திருக்க வேண்டும்.

நாடக ஆர்வலர்கள் எவருக்கும் குழந்தை ம.சண்முகலிங்கத்தினைத் தெரிந்திருக்கும். அவரது நாடகமான 'மண்சுமந்த மேனியர்' இலிருந்து இந்த நாட்டிய நாடகம்வரை சமகால விடயங்களைப் புதிய புதிய நாடக மொழிகளுக்கூடாகக் கதைத்து வருபவர். அவரோடு இந்நாட்டிய நாடகம் பற்றி வினவியபோது -

"இப்பொழுதுள்ள சமாதானத்தினை நான் வெறும் சமாதானமாகப் பார்க்கவில்லை. எங்

## "ஆர்கொலோ சதுரர்"

களது உரிமைக்கான சமாதானமாகவே பார்க் கிறேன். இங்கேயுள்ள ஒவ்வொரு தமிழ்க் குடிமகனும் இந்தச் சமாதானத்தினை மன நெருடலுடனேயே பார்க்கின்றான். அதாவது இந்தப் பேச்சுவார்த்தை தோற்றுவிடுமோமா என்று; இந்தப் பேச்சுவார்த்தை தோற்கக் கூடாது. இதிலே எங்களது பக்கம் முக்கியமானது. நாங்கள் பாதிக்கப்பட்டவர்கள். எனவே எங்களுக் குத்தான் நியாயம் வழங்கப்பட வேண்டும்.

எனது இந்த நாடகத்தில் பாரதப்போர் நிகழ்ந்தது கிருஷ்ணன் தூது தோற்றதினா லேயே என்கின்றேன். இங்கே நாங்களும் மிக முக்கியமான கிருஷ்ணன் தூதுக் கட்டத்திலேயே இருக்கின்றோம். இங்கே தோல்வி கிடைக்கக் கூடாது" என்றார்.



ஆர்கொலோ சதுரர் நாடகத்தினை நெறி யாள்கை செய்த திருமதி சாந்தினி சிவநேச னைச் சந்தித்து இந்த நாடகத்தின் நெறியாள் கையில் கடைப்பிடித்த புதிய உத்திகள் பற்றி வினவியபோது,

"நாட்டிய நாடகம் என்னும்போது பாட்டுக்கு அபிநயத்தினை எதிர்பார்ப்பதுதான் வழமை. ஆனால், இந்த நாட்டிய நாடகத்திலே பாட்டில் வரும் சொல்லுக்குச் சொல் அபிநயத்தினைப் பிடிக்காமல் சமூகத்திற்கான செய்தியை பரத முத்திரைகளுக்கு ஊடாகச் சொல்ல விளை கின்றோம். அதற்காக பரத முத்திரைகளை முற்று முழுதாகப் பிரயோகிக்காமல் உடலசைவால் வழங்கப்படும் உடல்மொழி **(Body language)** மூலமாகவும் முன்னெடுத்த செய்தியை வழங் குகின்றோம்".

பின்னணிக் குழுக்களுக்கூடாக -வழங்கப்ப டும் செய்தியை மேலும் அழுத்தமாய் வலியுறுத்தி விளங்கப்படுத்துகிறோம். பொதுவாக நாட்டிய நாடகத்திலே பாத்திரங்கள் பேசுவதில்லை. ஆனால், இந்த நாட்டிய நாடகத்திலே பாத்திரங் கள் பேசுகின்றன. அத்தோடு, வேண்டப் பட்ட இடங்களிலே ஜதிகளைப் பயன்படுத்துகிறோம்.

இந்த வகையில் புதியதொரு முறையி

### பரதத்தினோடு ஒரு புதிய முயற்சி

லேயே இந்த நாட்டிய நாடகம் நெறியாள்கை செய்யப்பட்டுள்ளது. இது யாழ்ப்பாணத்தில் புதியதொரு அனுபவமாகவே அமையும் என நினைக்கிறேன்" என்றார்.

ஆர்கொலோ சதுரர் நாட்டிய நாடகம்-அவல ஓலங்களுடனும், துன்பமுனகலுடனும், பண்டைய போர்க்கருவிகளின் பேரிரைச்சலுட னும் ஆரம்பமாகின்றது.

பாரதப் போரின் பன்னிரெண்டாம் நாள் யுத்தத்தின் முடிவில் மாண்ட வீரர்களின் உடலங்களை இனங்காணும் நிகழ்வுடன் தொடங்குகின்றது. இந்நிகழ்வானது இரு சேனைப் படைகளாலும் உடலங்களை இனங் காண்பதுடன் மட்டுமல்ல; வேறுபட்ட மூன்று தலைமுறையினர் இந்த யுத்தத்தினை எவ் வாறு விளங்கிக்கொள்ள முயலுகின்றனர். என்பதையும் சொல்கிறது.

அவர்களுடன் நீங்களும் இணைந்து பதின் மூன்றாம் நாள் யுத்தமாகிய பத்மவியூகத்திற் குள் செல்லும் அபிமன்யுவை காணவேண்டு மல்லவா? வரும் ஞாயிறுவரை காத்திருங்கள்!

— அநபரயன்




# சடலமாய் கரையொதுங்கிய கணவன்; கலங்கச் செய்தாலும் தளர்ந்து விடாதவர்!

## ஒரு கரையோரக் கிராமத்தின் கண்ணீர்க் கதை

**யாழ்.குடாநாட்டில் யுத்தத்தின் பிடிக்குள் சிக்குண்டு விதவைகளாக்கப்பட்ட பெண்கள் ஏராளமாகவே இருக்கின்றார்கள். அந்த வகையிலேயே ஆனைக்கோட்டையில் ஒரு சிறு கிராமமாக இருக்கின்ற சாவற்கட்டுக் கிராமத்தில் கடற்தொழிலுக்குச் சென்றோர் சடலங்களாகக் கரைதிரும்பிய அவலங்களால் சுமார் 38 வயதிற்குட்பட்ட பல இளம்பெண்கள் விதவைகளாக்கப்பட்டனர்.**

**அவர்கள் தமக்குள் ஒன்றிணைந்து 'தாரகா விதவைகளுக்கான மறுவாழ்வு மையம்' என்ற அமைப்பை உருவாக்கி, அதன் மூலமாகக் கடன் திட்டங்களைப் பெற்று முன்னேறி வருகின்றார்கள். அந்த அமைப்பின் தலைவர் மற்றும் உறுப்பினர்களைச் சந்தித்து உரையாடியபோது, அவர்கள் கண்ணீர் ததும்ப தங்கள் நிலைகளைக் கூறினார்கள். அவர்களில் சிலர் தம் மனம் திறக்கின்றனர்.**



**இதயராஜ் சைலா**
**(அமைப்பின் தலைவி)**

*1996* ஆம் ஆண்டு கடற்தொழிலுக்குச் சென்ற கணவன் மீண்டும் வரவில்லை. கடற்தொழிலுக்குச் சென்றவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள் என்றுதான் சொன்னார்கள். நாங்களும் அதை நம்பி ஒவ்வொரு இடமுமாக அலைந்து திரிந்தோம்.

இந்தநிலையில் 41 ஆவது நாள் இங்கிருந்து தொழிலுக்குச் சென்றவர்கள், உடைகளுடன் எலும்புக்கூடுகள் கரையொதுங்கியதாக வந்து தெரிவித்தார்கள். அதன்படி அங்கு சென்றவர்களுள் நான் எனது கணவனின் உடையைக் கொண்டு அவரது எலும்புக்கூட்டை அடையாளம் கண்டேன். ஆறுதலுக்காக வீட்டிற்குக்கூட கொண்டுவந்து அழமுடியாதநிலையில் அங்கேயே அடக்கம் செய்தார்கள்.

1987 ஆம் ஆண்டு ஏற்பட்ட பிரச்சினையில் எனது தந்தையை இழந்த எனக்கு, 17 ஆவது வயதில் திருமணம் செய்து வைத்த நிலையில், 19 ஆவது வயதில் விதவையாக்கப்பட்டேன். எனக்கு ஒரு பிள்ளை இருக்கிறது. அந்தப் பிள்ளைதான் எனக்கு இப்போது ஆறுதல் தருகின்றது.

இந்த நிலையில் எமது கிராமம் ஏராளம் இளம் விதவைகளையும், கணவனால் கைவிடப்பட்டவர்களையும் அதிகமாகக் கொண்டிருக்கிறது. விதவைகள் என்று நாங்கள் ஒதுங்கியிருந்தவேளையில், சாந்திகம் உளவுளத்துணை நிலையத்தினர் எங்களைச் சந்தித்து எல்லா விதவைகளையும் ஒன்றிணைத்து ஒரு அமைப்பை உருவாக்கினார்கள். அதுதான் எமது சாவற்கட்டு "தாரகா விதவைகளுக்கான மறுவாழ்வு மையம்".

அப்போது கியூடெக் நிறுவனத்தினரும் இங்கு வந்து எங்களைத் தம்முடன் இணைத்து பல செயற்பாடுகளை உருவாக்கினார்கள். விதவைகள் ஒன்றும் சமூகத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் அல்ல, அவர்களும் எல்லோரையும்போல சகல உரித்தும் உடையவர்கள் என்ற கருத்துக்களை வலியுறுத்தியதுடன், தென்பகுதிக்குச் சுற்றுலாவுக்கு அழைத்துச் சென்று, அங்குள்ளவர்களுடனும் கலந்துரையாட வைத்தனர். இவ்வாறான பல செயற்பாடுகள் மூலம் நான் இப்போது ஒரு குழுவிற்குத் தலைமை வகித்து அவர்களை வழிநடத்தக் கூடிய ஆற்றல்களைப் பெற்றுள்ளேன்.

இங்கு நடைபெறுகின்ற பொது நிகழ்ச்சிகளில் விதவைப் பெண்தான் மங்கள விளக்கேற்றி வைக்கும் முறையை வளர்த்து வருகின்றார்கள். எமது அமைப்பில் 80 விதவைகள் அங்கம் வகிக்கிறார்கள். அதில் 15 பேர் கணவனால் கைவிடப்பட்டவர்களும் உள்ளடங்கிறார்கள்.

எமது விதவைகள் அமைப்பு தனது அங்கத்தவர்களுக்கு மட்டுமன்றி, கிராமத்திலுள்ள ஏனைய வசதியற்ற குடும்பங்களுக்கும் வழிகாட்டியாக இயங்குகின்றது. எமது அமைப்பின் உதவியுடன் செலான் வங்கியில் சுயதொழில் முயற்சிக் கடன்களைப்பெற வழி செய்திருக்கிறோம். கியூடெக் நிறுவனத்தின் உதவியுடன் மலசலகூடம் அற்றவர்களுக்கு அதற்கான உதவிகளைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றோம்.

எமது சங்கம் உருவாக்கப்பட்டு தற்போதுதான் ஒரு வருடம் ஆகிறது. இந்தநிலையில் எமது சங்கம் நிறையவே சாதித்துள்ளது. நாங்கள் விதவைகள் என்று ஒதுக்கப்பட்ட நிலையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட எமது சங்கம், இப்போது வெற்றிகரமாக இயங்கி வருகிறது. நாங்கள் யாரிடமும் தொடர்ந்தும் கையேந்தும் நிலையில் இருக்கக்கூடாது என்பதற்காக சுழற்சி முறையிலான கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தி, அதன் மூலமாகப் பயன்பெற்று வருகின்றோம். மேலும் எமது அமைப்பினூடாக யுவதிகளுக்கான தையற் பயிற்சிகளையும் ஆரம்பிக்கவுள்ளோம். ✹



**சிவமலர்**
**(வயது 31)**

*1992* ஆம் ஆண்டு திருமணம் செய்துகொண்ட நான், 1996 ஆம் ஆண்டு ஆடி மாதம் 27 ஆம் திகதி எனது கணவனின் எலும்புக்கூட்டைக் கண்டேன்.

அராலிக் கடலுக்குத் தொழிலுக்குப்போன எனது கணவன் திரும்பி வரவில்லை. அவர் கைது செய்யப்பட்டுப் பலாலியில் தடுப்புக்காவலில் வைத்திருப்பதாகச் சொன்ன செய்தியைக் கேட்டு ஒவ்வொரு இடமுமாக அலைந்து திரிந்த நான், கடைசியாக 96 ஆம் ஆண்டு ஆடி மாதம் 7 ஆம் திகதி கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் கரையொதுங்கிய சடலத்தில் இருந்த ஆடையைக் கொண்டு கணவனை இனங்கண்டேன். கதறி அழுததைத் தவிர எதுவுமே எங்களால் செய்ய முடியாத நிலைதான்.

இவ்வாறு தொழிலுக்குச் சென்ற இடத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களுக்கு என, 50 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்கப்பட்டது. அதைப் பிள்ளைகளின் பெயரில் வைப்புச் செய்துவிட்டு ஜீ.ரி.இசற் நிறுவனத்தின் உதவியுடன் ஒரு வீட்டைக் கட்டிக் கொண்டிருக்கிறேன்.

சுயதொழில் முயற்சிக்காகக் கடன்பெற்று - அதன்மூலமாக கோழி வளர்ப்பு மற்றும் பீடி சுற்றுதல் போன்ற வேலைகளைச் செய்து எனது பிள்ளைகளைப் பராமரித்துக் கொண்டிருக்கிறேன். ✹

**இராஜசிங்கம் விக்கினேஸ்வரி**
**(வயது 32)**

கடற்தொழிலுக்குச் சென்ற எனது கணவன் காணாமற்போனார். சுமார் 41 நாட்களாக எனது கணவரைக் காணாத நான் ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் இருந்த கடற்படை மற்றும் பொலிஸ் நிலையங்களுக்கு கணவனைப் பற்றிய தகவல்களைப் பெறுவதற்காகச் சென்றேன். அப்போது அவர்கள் கூறுவார்கள்- கணவன் கைது செய்யப்பட்டுள்ளார். விடுதலை பெறுவார் என்றுதான். அதனால், நான் எனது 2 மாதக் கைக்குழந்தையுடன் கணவனின் விடுதலைக்காக அலைந்து திரிந்தேன். ஒருநாள் ஊர்காவற்றுறைக் கடற்படை முகாமிற்குச் சென்றுவிட்டு வீட்டிற்கு வந்தபோதுதான், 2 சடலங்கள் கரையொதுங்கிய செய்தி வந்தது. அடுத்தகிழமை 3 சடலங்கள் கரையொதுங்கின. இந்த நிலையில் கடற்கரைக்குச் சென்ற நாங்கள் உருக்குலைந்த எலும்புக்கூடுகளில் இருந்த உடைகளைக் கொண்டு அடையாளம் தேடியபோதுதான் எனது கணவனின் எலும்புக்கூட்டையும் அடையாளம் காண முடிந்தது. அதை அங்கேயே அடக்கம் செய்துவிட்டு வந்தோம்.

சிறுவயதிலேயே திருமணம் செய்த நான் 25 வயதில் 5 பிள்ளைகளுடன் விதவையாக்கப்பட்டேன். எனது கணவன், பிள்ளைகளை நன்றாகப் படிப்பித்து நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

அந்த நினைவுகளுடன் நான் இப்போது பீடி சுற்றும் தொழில் மூலமும், சுயதொழில் முயற்சிக் கடன்களைப் பெற்றும் எனது பிள்ளைகளைப் படிப்பித்துக் கொண்டிருக்கிறேன். ✹

**சந்திப்பு: கலானந்தி.**

# அன்பின் சிந்திக்கு

## மனந் திறக்கும் ஒரு மடல்






சிந்தி,

நீ உனது தோழியின் மகளுக்கு மணம்முடித்து வைக்க எடுக்கும் முயற்சிகள் பற்றி எழுதிய கடிதம் கிடைத்தது. உங்கள் முயற்சி வெற்றிபெற எனது வாழ்த்துக்கள். காதலன் மணம் முடிக்க மறுத்து, உன் முயற்சி வெற்றிபெறாவிட்டால் என்ன செய்வது? என்று வினா எழுப்பி வேதனைப் பட்டிருந்தாய்.

ஒன்றுமறியாத பிஞ்சுமகவொன்று வேதனைச் சேற்றுள் அழுந்தப்போவதாக நீ எழுதியது முற்றிலும் உண்மை.

இத்தகைய குழந்தைகளின் பிறப்பு நதிமூலம், ரிஷிமூலம் போன்று அறியப்படாது போகவேண்டும். தவறின் குழந்தையை அவப்பெயர் நிழல்போல தொடரும்.

ஒரு குழந்தைக்குத் தாய், தந்தையர் இல்லாது போக ஆயிரம் காரணங்கள் உண்டு. அத்தகைய ஏதோ ஒரு காரணத்தால் பெற்றோரை இழந்த குழந்தைகளோடு இக்குழந்தைகளும் கலந்து வளரவேண்டும்.

இந்தக் குழந்தைகளை வளர்ப்போரும் இவர்களைத் தத்தெடுத்து வளர்ப்போரும் இவர்களது பிறப்பைப்பற்றி அறிய வாய்ப்பிருக்கக்கூடாது.

எனவே, தொண்டு மனப்பான்மை கொண்டோர் இணைந்து இதனை ஒரு தொண்டாகக் கருதிச் செயற்பட வேண்டும்.

இதுமிக அவதானமாகக் கையாளப்பட வேண்டிய ஒன்றாகும். மனங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் இவ்விடயம் தத்தமது சொந்த அறிவைப் பயன்படுத்தி உடனுக்குடன் நிலைமைக்கேற்றவாறு செயற்படக்கூடியவர்களால் கையாளப்படவேண்டிய ஒன்றாகும். ஒரு சிறு சொல்கூட மனத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தலாம்.

குழந்தையின் உண்மையான தாயின் மனம் மிகவும் வேதனைப்பட்டுக்கொண்டிருக்கும், தாய்மை மகிழ்வோடு கொண்டாடப்பட வேண்டிய ஒன்றாகும். ஆனால் இவளைப் பொறுத்தவரை வேறுபட்ட ஒரு மனநிலையில் இருப்பாள். அவளின் மனம் இப்படித்தான் இருக்குமென்று கூறமுடியாது. வெறுப்போ, வேதனையோ, ஏக்கமோ எதுவாகவுமிருக்கலாம்.

அவளின் மனநிலை அறிந்து பக்குவமாகப் பழகி அவளது குழந்தையின் எதிர்காலம் பற்றித் தீர்மானிக்க வேண்டும்.

குழந்தை தன்னுடையது என்று வளர்க்க விரும்பும் தாயுமிருக்கலாம். அவள் இந்த சமுதாயத்தில் தானும் பிள்ளையும் போடவேண்டிய எதிர்நீச்சலைப் புரிந்துகொள்ளச் செய்யவேண்டும். அவள் கைவிட்டவனுடன் சேர்ந்து வாழச் சந்தர்ப்பம் வரலாம், வராமலும் போகலாம். எந்தப் பிரச்சினைகளையும் சமாளிக்கும் மனோதிடம் அவளுக்கு ஏற்படுத்தப்படவேண்டும்.

குழந்தை ஒரு சுமை என்று கருதி அஞ்சினால், அவளிடமிருந்து குழந்தையைப் பிரித்து வேறு பெற்றோரிடம் ஒப்படைக்கும் பொறுப்பு மேற்குறித்தவாறு அவதானமாகக் கையாளப்பட வேண்டும்.

சிந்தி, ஒரு குழந்தை உருவாக ஆணுந்தான் காரணமாக இருக்கின்றான். ஆனால், பெண்ணுக்கு ஏற்படும் பிரச்சினைகள் அவனுக்கு ஏற்படுவதில்லை. தவறு எங்கிருக்கிறது? சிந்தி, சீற்றம் வருகிறதல்லவா?

அன்புடன்
யோசி

# கவிதைச் சோலை

## நினைவின் படர்தலில்...

மனதுக்குள் கொடிகொடியாய் இழைந்து
படுத்திருக்கும் நினைவுகள்...!
மல்லிகைக் கொடியென எண்ணி
சுற்றிலும் படர்ந்த பாம்புகளாயும் சில
படர்வுகள்...
உதற நினைக்கும் மனம்
பாம்பெனும் பயம்கொண்டு...
சீ... போக மறுத்துப் பயம் காட்டி...
நெளிந்தபடி...
கொடியோடு கொடியாய்...
உதறிவிடும் வேளைகளில்
போனதாய் போக்குக்காட்டி...
பிறிதொரு வேளையில்
திடுக்குற்றுச் சிலிர்க்க வைத்து...
இருந்தாலும்,
உள்ளே சுருட்டிக் கொண்டு...
மல்லிகைப் பூப்பந்தாய்...
மனதை வருடி வருடி வரும் வாசம்
வருஷத்தில் நாலைந்தே தரமெனினும்...
சாகும் வரைக்கும் இந்த
மனதினின்றும் அகலாததாய்...

- தாட்சாயனி.

## பெண்ணினமே...

உன் உறங்கும் காலம்
முடிவுறும் வேளை
இதோ-
மிக அருகில்
'அடுக்களை அரசி'
'கற்புத்தெய்வம்'
'மெல்லியலாள்' etc.. etc..
எல்லாம் வெறும் கனவுப்
பொன் விலங்குகள்,
சுயநலக்காரர் உன்மேற் சூட்டிய
மாய முட்கிரீடங்கள்.
உன் பொறுப்பைத் தட்டிக்கழிக்க
'மெல்லியலாள்' என
உன்மேற் போர்த்தப்பட்ட
போர்வையைக் காட்டி
அதனுள் ஒளியாதே.
கனவுகள் வேஷங்களைக் கலைத்து
விரைவில் விழித்தெழு!
நிஜத்தை எதிர்கொள்!
நின் பங்களிப்பைச் செய்.

- மைத்ரேயி.

## வேஷம்

ஓ மனமே...
சில கணங்கள்
கண்கள் இரண்டையும்
மூடிக்கொள்வதாக நினை;
ஏனெனில்
கண்டும் காணாமல் இருப்பதற்காக!
காதுகள் இரண்டையும்
பொத்திக் கொள்வதாக நினை;
ஏனெனில்
கேட்டும் கேட்காமல் இருப்பதற்காக
வாயினை அடைத்துக் கொள்வதாக நினை;
ஏனெனில்
சிலவற்றைப் பற்றிப் பேசாமல் இருப்பதற்காக
ஆமாம்...
நடிப்பவர்க்குத்தான் இந்த உலகம்.

~ கங்கா.

## இயல்பாய் இருப்போம்



நாம்
நாமாக இருப்பதில் தான்
சுகம்!
மேடையேறிக்
கோமாளி வேஷம்
போட்டாலும்
சொந்த வாழ்க்கைக்கு
நாம் கதாநாயகி தான்!
அலங்காரமான போலியைவிட
உண்மையான நிஜமே
நேசிக்கப்படும்.
நண்பியே,
உன் தகுதியை
கண்ணாடியில் பார்த்தா
எடை போடுகிறாய்...?
நம்மை ~ நாம்
புரிந்து கொள்ளாதவரை
கண்ணாடியும் ~ நம்மை
தவறாகவே பிரதிபலிக்கும்.
நாம்
நாமாக இருப்பதில்தான்
சுகம்!

- சுகதினி.

## வாழ்வினைப் பதிதல்

வாழ்வின் ஒவ்வொரு உயிர்ப்பும்
வயதாய் உதிர
வெற்றிப் பெண்ணின்
நெற்றியில் முத்தமிட்டேன்.
இளைஞர்களை விழுத்த்கூவென
பூத்த இளமையை
எச்சிலாய்த் தள்ளினேன்.
எக்களித்தது என் ஆற்றல்!
புத்தகங்களை உண்ட என் ஏப்பம்
பலருக்குப் பிடித்ததாயில்லை.
எனினும்
வினாத்தாள்கள் மீதான
என் வாந்திக்குக் குறைவில்லை.
பட்டப் பிரசவிப்பு முயல்வில்
பகீரதனின் உடன்பிறப்பானேன்.
மெல்ல ஒட்டிய
என் கன்னக் குழிவுகள்
கல்வித் தராதரங்களால்
நிரம்பியதான என் ஆசுவாசங்கள்!
சுடரிழக்கும் விழிகளில்
அடரிழக்கும் கூந்தலில்
அக்கறையற்று
படிப்பினால் வாழ்வு 'பதியும்'
நான்...
நேற்றுத்தான் சிதறினேன்.
இலவம் பஞ்சாய்...
திசைகளற்று அலைந்தேன்.
வெளிப்பகன்ற இருள்.
அகர அறிவில் 'அவஸ்தையுற்ற'
பள்ளித் தோழி ஒருவள்
என்னதே ஐம்பதில்
ஐந்து பிள்ளைகளோடு
பேர் சொல்லும் பதிவாம்.
இரங்க நோக்கினாள் என்னை!
தயங்கி வினவினாள்
என் பதிவுகள் பற்றி...
முன்பொருநாள்
பூச்சியத்தை அண்டிய அவளது
புள்ளிகளைக் கேட்கையிலான
என்தயக்கம்
இப்போது அவளிடம்.
நான்...
பதிலற்றுப் புன்னகைத்தேன்.
அப்புன்னகை
அழகாக இருந்தது.

- ச.சாரங்கா

# வாழ்வில் வளர்ச்சி நிலைகள்

# அறிதலும் புரிந்து கொள்வதும்

இளமைப்பருவம் தொடங்குவது சரியாக இந்த வயதிலேதான் என்று யாராலும் கூறமுடியாது. பிள்ளைப்பருவம் முடிந்ததும் இளமைப்பருவம் ஆரம்பமாகும். இந்த வயதில் பிள்ளைகளின் சரீர வளர்ச்சி மிகவும் வேகமாக வளரும் என்று கூறலாம். சிறு வயதில் சரீர வளர்ச்சி வேகமாக வளர்ந்தது. பின்பு அதன் வேகம் சிறிது குறைந்திருந்தது. இந்த வயதில் திரும்பவும் சரீர வளர்ச்சி வேகமாக இருக்கும்.

சரீர வளர்ச்சி என்று கூறும் போது பால் உறுப்பு வளர்ச்சி வேகம் அதிகமாக இருக்கும். இக்காலத்தில் ஆணும் பெண்ணும் பூப்படையும் காலத்தை நெருங்குவர். இதனால் சரீரத்தில் பல மாற்றங்கள் ஏற்படும். இச்சரீர மாற்றம் ஏற்படும்போது ஆண், பெண் இருபாலாரிலும் வெளி அடையாளங்கள் பல தெரியத் தொடங்கும். உதாரணமாக ஆண் பிள்ளையானால் பூப்படைவதற்கு முன் உரோமம் வளர்தல், குரல் மாறுதல் போன்றவை நிகழும். பெண்பிள்ளையானால் தோலின் கீழ்ப்பகுதி மூடி சரீரத்தில் சற்றே பூசியதாகத் தெரியத் தொடங்கும். அக்காலத்தில் பெண்பிள்ளை பூப்படைய ஆயத்தமாகிறது என ஆயத்தப்படுத்தல் வேண்டும்.

எமது கலாசாரத்தில் இக்காலத்தில் ஆண், பெண் இரு பிள்ளைகளையும் ஆயத்தப்படுத்துதல் பெற்றோரால் நிகழ்வதில்லை. பெற்றோர் ஆயத்தப்படுத்துவதானால் மிகவும் நன்று.

எமது கலாசாரத்தில் பெண் பிள்ளைகள் பூப்படைவதைப்பற்றி பெரியவர்களுக்குத் தெரியும். ஆனால் ஆண் பிள்ளை பூப்படைவதைப் பற்றி பெரும்பாலானோருக்குத் தெரி



யாது. எமது வீடுகளில் கதைப்பதுமில்லை. இதை அறிவது முக்கியமானதாகும்.

பெண்பிள்ளை பூப்படைதல் என்பதை முதலில் நோக்குவோம். முதன் முறையாக கருப்பையிரண்டில் ஒரு பக்கத்திலுள்ள கருப்பையிலிருந்து ஒரு சினை முற்றி பலோப்பியன் நாளத்துக்குள் சென்று கற்பப் பைக்குள் பயணம் செய்யும். பயணம் 24 மணிநேரம்வரை நீடிக்கும். சினை கர்ப்பப் பைக்குள் பயணம் செய்யும் போது ஆணின் விந்துடன் சேராதிருந்தால் அது 24 மணித்தியாலத்தில் கரைந்துவிடும். அதேபோன்று மற்றொரு ஆயத்தமும் நடைபெறும்.

அதாவது கர்ப்பப்பையில் இரத்தம் சேர்க்கப்படும். காரணம் ஆணின் உயிரணுவுடன் சினை கலந்ததும் உருவாகும் குழந்தையைப் பாதுகாப்பதற்காகக் கர்ப்பப்பையில் ஆயத்தம் இடம்பெறும். இந்தப் பெண்பிள்ளை சிறுமியாக இருப்பதால் ஆணின் விந்து சேராத நிலையில் கர்ப்பப்பைக்குள் சேர்க்கப்பட்ட இரத்தம் அவசியமில்லாது போய்விடும். தற்கால ஆய்வின்படி கர்ப்பப்பை மாதத்திற்கொருமுறை கழுவப்படுகின்றது என்கின்றனர். இக்காரணத்தால் சேர்க்கப்பட்ட இரத்தம் வெளியேற்றப்படுகின்றது. இதை முதன்முதலில் கண்டதும் பெற்றோருக்குத் தெரியவருகின்றது. இதைக் கண்டதும் பிள்ளை பூப்படைந்து விட்டாள் என்கிறோம். அதன்பின்பு மாதவிடாய் சக்கரம் ஆரம்பிக்கத் தொடங்கும். ஆரம்பத்தில் மாற்றமுள்ளதாக இருக்கலாம். காலப் போக்கில் சக்கரம் முறையானதாக அமைந்த பின் சாதாரணமாக 28 நாட்களுக்கொருமுறை ஒருமாதம் இடதுபக்க சினைப்பையிலும் மறுமாதம் வலதுபக்க சினைப்பையிலும் சினை முற்றி வெளிவரும்.சிலருக்கு 24, 25 நாட்களுள்ள குறுகிய சக்கரமாகவும் சிலருக்கு 30,34 நாட்களுள் நீண்ட சக்கரமாகவும் இருக்கலாம். பொதுவாக 28 நாட்கள் இருக்கும். இது முறைப்படி நடக்க பூப்படைந்தபின் ஆறு மாதமாவது ஆகலாம்.

அது அப்பிள்ளை நல்ல ஆரோக்கியமாக இருக்கிறது என்பதன் அடையாளமாகும். இது நல்ல நிகழ்ச்சி. மகிழ்ச்சியான நிகழ்ச்சியாகும். ஆனால் எமது பெற்றோர் தமது பிள்ளைகளை இதற்கு ஆயத்தப்படுத்துவதில்லை. செய்யும் ஆயத்தமும் நன்மையான ஆயத்தமில்லை.

சில பெற்றோர் பூப்படைவதை நோயாகக் காண்கின்றனர். மாதவிடாயை நோயாக நினைக்கின்றனர். சுகமில்லாமல் வந்துவிட்டது என்ற வார்த்தையைப் பாவிப்பர். இது சரீர நோய் என எண்ணுகின்றனர். இப்படிப்பட்ட வார்த்தைகளைப் பாவிக்கும்போது அதில் விளைவுகளும் உண்டு.

எஸ்.ஜே.யோகராசா,
உளவளத்துணை ஆலோசகர்.

ஒருநாள் ஒரு பெண் என்னிடம் தனது பிரச்சினையைக் கூறினாள். "எனக்குச் சுகமில்லாமல் வரும் போது மயக்கம் வருகிறது" என்றாள். இங்கே சுகயீனம் என்பது என்ன என்பதைத் தேடிப் பார்த்த போது மாதவிடாயே அந்த குறிப்பிட்ட சுகயீனம் என்றதைப் புரிந்து கொண்டேன். இப்பிள்ளைக்கு பெண்கள் விடுதியிலேயே இந்நிகழ்வு ஏற்பட்டுள்ளது. இப்பிள்ளை வீட்டில் இருக்கும் காலத்தில் மாதவிடாயை ஒரு நோய் எனப் பெரியவர்கள் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுத்துள்ளார்கள். மாதவிடாய் வந்த காலத்தில் பாடசாலை செல்லவோ, வேலை செயயவோ அனுமதிக்கவில்லை. இதனால் இப்பிள்ளையின் மனதில் மாதவிடாய் என்பது நோய் என்று புரிந்துவிட்டது. அந்த நேரத்தில் ஒரு வேலையும் செய்யக்கூடாது என மனதில் பதிந்துவிட்டது. பயிற்சிக்காகப் பெண்கள் விடுதியில் தங்கியிருக்க வந்ததும் அங்கிருப்பவர்களுக்குப் பிள்ளையின் நிலை தெரியாது. பாடங்களில் பங்குபற்ற மாதவிடாய் காலத்தில் முடியாத நிலை ஏற்பட்டது. மனதில் கஷ்டமாகியது. மற்றவர்களும் அவளுக்கு உதவவில்லை.

(அடுத்த வாரம் தொடரும்)

## உணவைச் சுவையாக்க...

- இரசம் கொதிக்கும்போது வெண்டிக்காயை வெட்டிப்போட்டால் இரசம் மணமாக இருக்கும்.
- கூடையில் மரக்கறிகளைப் போட்டு ஈரத்துணியால் மூடி வைத்திருந்தால் மூன்று நாட்கள்வரை வாடாமல் இருக்கும்.
- மோர் புளித்துவிட்டதா? அதில் இரண்டு கோப்பை நீர்விட்டு அரைமணி நேரம் வைத்திருந்தால் மேலே நீர் தெளிவாகப் படியும். அதை அகற்றிவிடவும். மோர் புளிக்காது.
- முருங்கைக்காய் அதிகம் கிடைக்கும்போது, அதை வாங்கி வேகவைத்து உள்ளிருக்கும் சதைப்பற்றான பகுதியை வழித்தெடுத்து, அத்துடன் அரைத்த கடலைப்பருப்புச் சேர்த்து பச்சைமிளகாய், கறிவேப்பிலை, வெங்காயம், உப்புச் சேர்த்து வடையாகத் தட்டலாம். ஆரோக்கியமான சுவையான சிற்றுண்டி இது.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்*
*தன்நெஞ்சே தன்னைச் சுடும்.*
*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## மெய்நிலையும் பொய்க்கருத்தும்

இப்போது ஜனாதிபதியினதும் எதிர்க்கட்சிகளினதும்- 'மனித உரிமைகளைக' காக்கவெனப் புறப்பட்டிருக்கும் சில குழுக்களினதும் பிரலாபம் - போராட்டத்தில் இணையும் சிறார்களைப் பற்றியதாக அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகள் தமது அமைப்பில் 18 வயதிற் குட்பட்ட சிறார்களை இணைத்து வருவதாகவும், இது- சர்வதேச போர் நெறிமுறைகளை மீறும் செயலென்றும் குரலெழுப்பும் இவர்கள் -

அடுத்தகட்டப் பேச்சுக்களின்போது இந்த விவகாரத்தை முதன்மைப்படுத்தி - விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டுமென்றும் கோரிவருகின்றனர்.

'ஆடு நனைகிறதே என அழும் ஓநாய்களான' இவர்கள் - தமது ஆட்சிக்காலத்தில் தமிழ்ச்சிறார்களைக் கொன்றும், வதைத்தும் புரிந்த படுகொலைகளும் -

அவசியமான மருந்துப் பொருட்களையும், கல்விக்கான வாய்ப்புக்களையும் தடைசெய்து மேற்கொண்ட இன ஒடுக்குமுறைகளும், இன்னமும் மாறாத தழும்புகளாயிருக்கும் நிலையில் -

மனிதாபிமானம் பற்றியும் சிறார்களின் உரிமைகள், பாதுகாப்பு தொடர்பாகவும் இவர்கள் பேசுவது- இந்த அரசியல் வேடதாரிகளின் அப்பட்டமான உள் நோக்கத்தைக் காட்டுகின்றது.

ஏற்கனவே - விடுதலைப் புலிகளினால் பல தடவைகளிலும் வலியுறுத்திக் கூறப்பட்டு வந்ததுபோல - சிறார்களை இணைத்துக் கொள்ளும் விடயத்தில் - தலைமையின் உறுதிப்பாட்டைக் காத்துக் கொள்வதில் அவர்கள் மிகக் கவனத்துடனேயே இருந்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் தாமாக, தமது சொந்த விருப்பில் இணைந்துகொண்ட சிறார்கள் பலர் - யாழ்ப்பாணத்திலும், வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் வைத்துக் காலத்துக்குக் காலம், அவர்தம் பெற்றோரிடம் விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்டு வந்துள்ளனர்.

ஓரிரு தினங்களுக்கு முன்னர்கூட மட்டக்களப்பில்- புலிகளுடன் இணைந்துகொண்ட ஐந்து சிறார்கள், பெற்றோரிடம் - போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்தவகையில் - ஒரு புறம் சிறார்களைச் சேர்ப்பதில்லையென்ற முடிவில் புலிகள் உறுதியாயிருந்து வரும் பொழுது,

இன்னொருபுறம் - கிழக்கில் விடுதலைப் புலிகள் கட்டாய ஆட்சேர்ப்பில் ஈடுபட்டு வருவதாகவும் - சிறார்கள் கடத்தப்படுவதாகவும் இராணுவப் புலனாய்வுத்துறை அளித்த தகவல்கள் - உண்மைககுப் புறம்பானவை என்றும், இட்டுக்கட்டப்பட்டவையென்றும் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே நேரடியாக - இராணுவத் தளபதியையும், இராணுவப் புலனாய்வுப் பகுதியினரையும் கடுமையாகச் சாடினார்.

இத்தகைய போக்கு அரசாங்கத்தை ஆபத்தான கட்டத்திற்குள் தள்ளிவிடுமென்று பாதுகாப்பு அமைசசர் திலக் மாரப்பன மேலும் கண்டித்திருந்தார்.

இந்தவகையில் சிறார்களின் ஆட்சேர்ப்புப் பற்றி வெளியான தகவல்கள் உண்மைக்குப் புறம்பானவையென - நிரூபிக்கப்பட்டுவிட்டபோதும்-

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், சில 'மனித உரிமை' அமைப்புக்களும் இவ்விவகாரத்தை தூக்கிப் பிடித்து, முதன்மையான விவகாரமாகப் பேசி வருவது - வீண் குழப்பத்தை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணமேயன்றி வேறல்ல.

சர்வதேச அளவில் - சிறார்களின் உரிமை பாதுகாக்கப்படுவது பற்றியும், போரில் சிறார்களை ஈடுபடுத்துவதைச் சர்வதேச சட்டங்கள் எதிர்க்கின்றன என்ற வகையில் - இவ்வகையிலேனும் விடுதலைப் புலிகளின்மீது சேறு பூசி விடலாமென்றும் இந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

ஆனால் - யுத்தத்தில் பாதிப்புற்ற சிறார்களின் நல்வாழ்வுக்காக ஆதரவு மையங்களை அமைத்தும், அவர்களை சகல வகையிலும் முன்னேற்ற வேண்டுமென்றும் விடுதலைப் புலிகளின் தலைமை உறுதியுடன் இயங்கியும், செயற்திட்டங்களை வகுத்தும் வருகையில்- இந்த பொய்ப்பிரசாரங்கள் எதுவித வாய்ப்புக்களு மின்றி சாயம் கலைந்து போவதே தற்போது நடைபெற்று வருகின்றது.

எனவே - இவ்விவகாரத்தில் அக்கறை காட்டும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு மற்றும் சர்வதேச மனித நேய அமைப்புக்கள் - யதார்த்தத்தை மிகச் சரியாகப் புரிந்துகொண்டு- தவறான, திரிபுபடுத்தப்படும் கருத்துக்களுக்குள் சிக்குண்டுவிடாமல்- உண்மை நிலையை இன்னமும் தெளிவுபட, வெளிக்கொண்டு வரவேண்டுமென்றே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

அவ்வாறான உதவியே - யுத்தத்தால் பாதிக்கப்பட்ட சிறார்களைக் காப்பாற்றவும், முன்னேற்றவும் மேற்கொள்ளப்பட்டுவரும் ஆதரவு முயற்சிகளுக்கு ஊக்கமூட்டுவதாகவும் அமையும்.

# புலிகளின் தாக்குதல் வழிமுறைகளை கையாண்டு சர்வதேச கடற்போக்குவரத்துப் பாதையில் இஸ்லாமியத் தீவிரவாதிகள் தாக்கலாமாம்

விடுதலைப்புலிகளால் வீரியம் மிக்க தாக்குதல் முறையாகக் கைக்கொள்ளப்பட்ட கடல்வழித் தாக்குதல் உத்திகளை, இஸ்லாமியத் தீவிரவாதிகள் சர்வதேச கடற் போக்குவரத்தில் ஈடுபடும் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்துவதற்குப் பயன்படுத்தலாம் என்ற அச்சுறுத்தல் ஏற்பட்டிருப்பதாக, வொஷிங்ரனில் உள்ள கடல் வழிப்போக்குவரத்துக்கான புலனாய்வுக் குழு (Maritime Intelligence Group) அறிவித்திருக்கிறது.

ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் தொடுத்தால் சர்வதேச கடற்போக்குவரத்து மையங்கள் மீது இஸ்லாமியத் தீவிரவாதிகள் இத்தகைய தாக்குதல்ளைத் தொடுக்கலாம் என்று அஞ்சப்படுவதால், இத்தகைய மையங்கள் உஷார்ப்படுத்தப் பட்டுள்ளன.

ஜெம்மா இஸ்லாமியா, அல்கெய்டா போன்ற தீவிரவாதக் குழுக்கள், இத்தகைய தாக்குதல் உத்திகளை பயன்படுத்துவதற்கு ஏற்ப தம்மை வளர்த்து வருவதாக புலனாய்வு அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

விடுதலைப்புலிகளின் கடல்வழித் தாக்குதல் உத்திகளை முன்மாதிரியாகக் கொண்டு இந்தத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் எனக் கருதப்படுகின்றது.

வெடிமருந்துப் படகுகள் மூலம் தாக்குதல்களை நடத்துவது போன்ற சில திறன் வாய்ந்த உத்திகளை இஸ்லாமியத் தீவிரவாதிகள், புலிகளின் தாக்குதல்களை முன்னுதாரணமாகக் கொண்டு மேற்கொள்ளக்கூடும் என, சிரேஷ்ட புலனாய்வாளர் வெயில்மன் கிமல்மன் தெரிவித்தார்.

அத்துடன் மனித டோர்பிடோக்களை (Human Torpedoes) மூலமும், சிறு நீர்மூழ்கிகள் மூலமும் சர்வதேச கப்பற்போக்குவரத்து மார்க்கங்களில் தாக்குதல்கள் நடத்தப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனால், உலகளாவிய ரீதியில் புதிய கடல்வழி பாதுகாப்பு நடவடிக்கைகள் அமுல்படுத்தப்படவுள்ளதாக வொஷிங்ரனில் நடந்த மாநாட்டில் அமெரிக்க கரையோரக் காவற்படைத் தலைவர் தெரிவித்தார்.

# சிறைக்கு வருவோர்களில் 80 வீதம் போதைவஸ்துக்காரர்!

## கொழும்பில் வெளியான அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

சிறைச்சாலைக்கு வரும் 80 சதவீதமான கைதிகள் போதைவஸ்துப் பாவிப்பவர்களாக இருப்பதாகப் போதைவஸ்துத் தடுப்புப் பொலிஸ் அதிகாரி புஜித் ஜெயசுந்தர தெரிவித்தார்.

இவர் மேலும் தெரிவிக்கையில், கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 10 ஆயிரத்துக்கும் அதிகமான- முழுமையாக போதைவஸ்துக்கு அடிமையானவர்கள் இருப்பதாகவும், நாடு முழுவதும் போதைப்பொருளுக்கு முழுமையாக அடிமைப் பட்ட ஒரு இலட்சம் பேர் இருப்பதாகவும் மேலும் கூறினார்.

நாளொன்றுக்கு 50 மில்லியன் ரூபா போதைவஸ்துக்காகச் செலவிடப்படுவதாகவும், இதனைத் தடுப்பதற்கு விழிப்புணர்வுப் பிரசாரங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்திருக்கிறார்.

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் செயற்பட அமெரிக்க அமைப்பு விருப்பம்

## கிளிநொச்சியில் இரு தரப்புப் பேச்சுக்கள்

(கிளிநொச்சி)

அமெரிக்க மனிதாபிமான உதவி அமைப்பினரும், நோர்வே தூதுக்குழுவினரும் நேற்று முன்தினம் தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பல்வேறு வேலைத் திட்டங்கள் பற்றி ஆராய்ந்தனர்.

நேற்று முன்தினம் காலை 9.30 மணியளவில் அமெரிக்க மனிதாபிமான உதவி அமைப்பான 'வேர்ல்ட் விஷன்' அமைப்பினர், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் ரெஜி, திட்ட இணைப்பாளர் லோறன்ஸ் திலகர் ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

இந்தக் கலந்துரையாடலில் அமெரிக்க மனிதாபிமான அமைப்பின் நிகழ்ச்சித்திட்ட அலுவலர், நிகழ்ச்சித்திட்ட ஆலோசகர், அதன் தேசிய உணவு உதவித்திட்ட அதிகாரி ஆகியோர் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் மீள்குடியமர்த்தும் பணிகளில், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துடன் இணைந்து செயற்படுவதற்கு அமெரிக்க மனிதாபிமான அமைப்பு விருப்பம் தெரிவித்துள்ளது.

கல்வி, சுகாதாரம் மற்றும் மருத்துவம் என்பவற்றுக்கு உதவுவதற்கும் இதர பல்வேறு உதவிகளை வழங்குவதற்கும் அவர்கள் விருப்பம் தெரிவித்தனர்.

பின் இவர்கள் தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரனைச் சந்தித்தனர்.

இதன்பின்-

இலங்கைக்கான நோர்வே தூதரக அதிகாரிகள்- தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பொறுப்பாளர் ரெஜி, திட்டப் பொறுப்பாளர் லோரன்ஸ் திலகர், கண்ணிவெடி அகற்றும் பிரிவுப் பொறுப்பாளர் யோகன் ஆகியோரையும் சந்தித்தனர்.

# போக்குவரத்து சபை ஊழியர்களுக்கும் ஓட்டோ சாரதிகளுக்கும் தகராறு

## பஸ்கள் புறப்படும் இடம் மாற்றம்

(வடமராட்சி கிழக்கு)

வடபிராந்தியப் போக்குவரத்துச்சபை பருத்தித்துறை சாலை ஊழியர்களுக்கும் - ஓட்டோ சாரதிகளுக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக, மறு அறிவித்தல் வரை சகல பஸ் வண்டிகளும் பருத்தித்துறை டிப்போவிலிருந்து புறப்படும் எனப் பருத்தித்துறை சாலைமுகாமையாளர் தெரிவித்துள்ளார்.

பருத்தித்துறை பஸ்நிலையத்தில் கடமையிலிருந்த நேரக் கண்காணிப்பாளரையும், நடத்துநரையும் இரு ஓட்டோ சாரதிகள் தாக்கிய சம்பவத்தைத் தொடர்ந்தே, இம்முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாகப் பருத்தித்துறைப் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது. விசாரணையை மேற்கொண்ட பொலிஸார் இரு ஓட்டோ சாரதிகளையும் பருத்தித்துறை நீதிவான் ச.பிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்தபோது இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

பருத்தித்துறைப் பஸ் நிலையத்தில் பஸ் வண்டிகளை நிறுத்துவதற்கு வசதியான இடத்தை ஒதுக்கித் தரும்வரை, பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து பஸ் வண்டிகளை சேவையில் ஈடுபடுத்த முடியாதநிலையில் இருப்பதாகப் பருத்தித்துறை டிப்போ முகாமையாளர் எஸ்.கமலநாதன் தெரிவித்தார். (17)

# ஆய்வு மையம் - 2002 நிகழ்வு இரு நாட்கள் பல்கலையில்

யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் 'ஆயவு மையம்-2002' என்ற நிகழ்வு இன்றும் நாளையும் யாழ். பல்கலைக்கழக மண்டபத்தில் காலை 8.45 மணியளவில் இடம்பெறவுள்ளது.

இந்த ஆய்வு மையத்தின் முதல அமர்வு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் இடம்பெறும். பேராசிரியர் சி.க.சிற்றம்பலம், பேராசிரியர் அ.சண்முகதாஸ் ஆகியோர் ஆய்வுகளை மேற்கொள்ளவிருக்கின்றனர்.

இரண்டாவது அமர்வுக்குப் பேராசிரியர் சி.சிவஞானசுந்தரமும், மூன்றாவது அமர்வுக்கு பேராசிரியர் சண்முகதாஸும் தலைமை வகிப்பார்கள்.

# அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் கனடா அவசரம் காட்டக் கூடாது

## கனேடியத் தூதுவரிடம் டக்ளஸ் கோரிக்கை

கனடாவில் தஞ்சமடைந்திருக்கும் இலங்கைத் தமிழ் அகதிகளைத் திருப்பி அனுப்புவதில் கனடா அரசாங்கம் அவசரம் காட்டக்கூடாது என, டக்ளஸ் தேவானந்தா கனேடியத்தூதுவரை நேரில சந்தித்துக் கோரிக்கை விடுத்துள்ளார்.

டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான தூதுக்குழு கனேடியத் தூதுவர் வலி ரேமன்ட்டை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியது.

பேச்சுவார்த்தைகளில் அடிப்படை அரசியல் பிரச்சினைகள் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியதே அவசியமாகும். முக்கியமான அடிப்படைப் பிரச்சினைகள் கலந்துரையாடலுக்கு எடுக்கப்பட்டு, இனப் பிரச்சினைக்கான தீர்வு காணப்பட வேண்டியது சமாதானச் சூழல் நிலைப்பதற்கு அவசியமானதாகும். எனினும், புலிகள் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தைகளினூடாக நியாயமான அரசியற்தீர்வுகாண முனைப்புடன் செயற்படுவதாக இல்லை.

எனவே, இனப்பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்பட்டு அது அமுலாக்கப்படும்வரையில், கனடாவில் தஞ்சம் அடைந்துள்ள இலங்கைத்தமிழர்களை திருப்பியனுப்புவது விருப்பத்திற்குரிய செயலாக இருக்காது என்பதைக் கனேடிய அரசாங்கத்திற்கு தெளிவுபடுத்தும் படியும் ஈ.பி.டி.பி.தூதுக்குழுவினர் கனேடியத் தூதுவரிடம் கேட்டுக் கொண்டனர்.

# வவுனியா உயர்பாதுகாப்பு வலயத்தில் 700 குடும்பங்கள் குடியமர்த்தப்படுவர்

வவுனியாவில் படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களிலும், விடுதலைப்புலிகளின் பிரதேசங்களிலும் 1250 குடும்பங்களை மீள்குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இராணுவ உயர்பாதுகாப்பு வலயமான ஓமந்தை, தாண்டிகுளம், நொச்சிமோட்டை, பூவரசன்குளம் பகுதிகளில் 700க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்வதற்கு இராணுவம் இணக்கம் தெரிவித்துள்ளது. மீளக்குடியமர்வோரின் விபரங்களும் திரட்டப்பட்டு வருகின்றன.

விடுதலைப்புலிகளின் பிரதேசங்களிலுள்ள 5 கிராம சேவையாளர்கள் பிரிவுகளிலும், ஏனைய பிரிவுகளிலுமாக 1250 குடும்பங்கள் மீளக்குடியமர்த்தப்படவுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

# தேடிப் படிக்கும் ஆர்வம் குறைந்ததால் மாணவர் கல்வித்தரம் வீழ்ச்சியடைகிறது

**உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் - கி.நடராஜா, கல்வியியல் முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர். பல்கலைக்கழகத்தில் சிலகாலம் பட்டபின் படிப்பு மாணவர்களுக்கும், கல்வியியல் முதுமாணி மாணவர்களுக்கும் கல்வி நிர்வாகம் பற்றி வருகை விரிவுரையாளராகப் பணியாற்றியவர். சமகால கல்விப் பிரச்சினைகள் பற்றி அவர் பேசுகின்றார்.**

**கேள்வி:** தற்போதைய மாணவர்களின் கற்றல்திறன் பற்றி நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?

**பதில்:-** தற்போதைய மாணவர்களின் கற்றல் திறன் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகவே உள்ளது. இதற்குச் சில காரணங்களைத் தெளிவாகக் குறிப்பிடலாம். கற்றல் திறன் என்பது மூன்று சக்திகளின் ஒருங்கிசைவினால் ஏற்படுவது- பெற்றோர், ஆசிரியர், மாணவர் என்பதே அச்சக்திகளாகும். பெற்றோர் பாடசாலையில் பிள்ளைகளைச் சேர்த்து விடுவதுடன் தம்கடமை முடிந்துவிட்டது என நினைத்துக்கொள்கிறார்கள். ஆசிரியர்களில் அர்ப்பணிப்புடன் தொழிற்படுபவர்கள் குறைவாகவே உள்ளனர். தம் பதவி உயர்வை உறுதிப்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக உள்ளனர். கற்பிப்பதற்கான தேடலும் அறிவும் ஆசிரியர்களிடையே குறைவடைந்து செல்கின்றது. மாணவர் மத்தியில் ஓர் வித்தியாசமான மனப்பாங்கு வளர்ந்திருக்கின்றது. சிறிதுநேர சந்தோசத்திற்காகப் பெருநேர சந்தோசத்தை இழக்கும் ஒருவகையான பாதிப்பிற்குட்பட்டுள்ளனர்.

**கேள்வி:**-கல்வி தவிர்ந்த ஏனைய (விளையாட்டு, சாரணியம், நாடகம், நடனம்) விடயங்களில் தற்போது மாணவர்கள் காட்டிவரும் அக்கறை பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்?

**பதில்:-** மாணவர் இத்துறைகளில் காட்டிவரும் ஆர்வம் நன்றாகக் குறைந்துவிட்டது. இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக நடந்துவரும் உள்நாட்டு யுத்தத்தினால் இத்துறையில் காட்டிவந்த ஆர்வம் மெல்ல மெல்ல மறைந்து போயிற்று. சூழ்நிலை காரணமாக ஊக்கப்படுத்தும் சக்தியும் குறைந்துவிட்டது. சில காலம் பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகூட நடாத்தப்படவில்லை. இன்னொரு காரணம், கல்வி ஒரு வியாபாரப் பண்டமாக மாறிவிட்டது. மாணவர்களின் முழுநேரமும் ரியூசனில் செலவழிக்கப்படுகின்றது. மட்டுப்படுத்தப்பட்ட பல்கலைக்கழக அனுமதி காரணமாகப் பெற்றோர் தம் பிள்ளைகளை இத்துறைகளில் பங்கேற்க அனுமதிக்கிறார்களில்லை.

**கேள்வி:-** தற்போது கற்பிக்கும் ஆசிரியர்கள் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** தற்போதுள்ள ஆசிரியர்களில் குறைவுடையவர்களும் உள்ளனர், நிறைவுடையவர்களும் உள்ளனர். இரண்டு தசாப்தங்களுக்கு




முன்னர் ஆசிரியராகக் கடமையாற்றியோருடன் ஒப்பிடும்பொழுது இவர்கள் வினைத்திறன் குறைந்தவர்களாகவே உள்ளனர். ஆசிரியன் எப்பொழுதும் கற்றுக்கொண்டேயிருக்க வேண்டும். படிப்பதை எப்ப ஆசிரியர் நிறுத்துகின்றாரோ அன்றே படிப்பிப்பதையும் நிறுத்த வேண்டும். பள்ளிக்கூடத்திற்கு வரும் ஒவ்வொரு பிள்ளைகளையையும் தன் பிள்ளைபோல கருதும் மனப்பாங்கு ஏற்படவேண்டும். ஆசிரியர்களிடம் கற்றல், அர்ப்பணிப்பு, கடமையுணர்வு, பள்ளிக்கூடப்பற்று, பிள்ளைகளுடன் நெருங்கிப்பழகுதல் போன்ற பண்புகளை விருத்தி செய்து கொள்ள வேண்டும்.

**கேள்வி:-** மாணவர்களின் கல்வி மேம்படுத்தலில் பெற்றோர்கள் காட்டிவரும் அக்கறையைப்பற்றி நீங்கள் என்ன கருகிறீர்கள்?

**பதில்:-** இன்றைய நிலையில் மாணவர் பலர் பெற்றோரிடமிருந்து எதனைச் சாதிக்க விரும்புகிறார்களோ அந்தச் சக்தியைப் பெற்றிருக்கின்றனர். பெற்றோர் தம்பிள்ளையின் கல்விசார் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதாகத் தெரியவில்லை. பல உயர்தரவகுப்பு மாணவர்-மோட்டார் வண்டிகூட ஓடுகிறார்கள். இதனால் தேவையற்ற சகபாடிகளின் கூட்டங்களினால் அவர்களது கல்வி பாதிக்கப்படுகிறது. பெற்றோர் தாம் நித்திரைக்குச் செல்ல அல்லது தொலைக்காட்சி பார்ப்பதற்காகப் பிள்ளைகளை இராக் காலங்களில் கண்காணிப்பதுகூட குறைந்துவருகின்றது. பசி, பட்டினி உணராத பிள்ளை- கல்வியில் முன்னேற்றமடைவதென்பது கடினமானது என்பதை பெற்றோர் உணரவேண்டும்.

**கேள்வி:-** தற்போதைய மாணவர்களிடையே தேடுதல் பழக்கம் (புதியவற்றை அறிந்து கொள்ளுதல்) பற்றி நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?

**பதில்:-** தற்போதைய நிலையில் மாணவர் தேடல் முயற்சிகளில் ஈடுபடுவது மிகக்குறைவு. கல்வியின் தரம் குறைந்து செல்வதற்கு இதுவுமோர் காரணம். கற்றலில் ஆர்வமிருக்குமாயின் தேடலிலும் ஆர்வம் ஏற்படும். பத்திரிகை வாசிப்பதுகூட பல மாணவரிடையே காணப்படுவதில்லை. ஆசிரியரது குறிப்பை மட்டுமே நம்பியிருக்கின்றனர். தற்போது பாடத்துணை நூல்கள் போதியளவில் வெளிவருகின்ற போதும், வாசிக்கின்றவர்கள் இல்லை. இதற்கும் சில காரணங்களைக் குறிப்பிடலாம்.

❋ கல்லூரிகளில் நூல் நிலைய வசதிகள் இன்மை.

❋ போதியளவிலான ஆங்கில அறிவின்மை.



**கி.நடராஜா**
அதிபர், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி

❋ மாணவருக்குக் கிடைக்கும் நேர வசதிக்குறைபாடு.

**கேள்வி:-** சில மாணவர்கள் தனியார் கல்வி நிலையங்களை மையமாக வைத்து நமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வது குறித்து உங்களின் கருத்து என்ன?

**பதில்:-** மாணவ, மாணவியர் தனியார் கல்வி நிறுவனங்களை நாடுவதில் தவறிருப்பதாக நான் உணரவில்லை. ஒவ்வொரு கல்லூரியிலும் எல்லாப் பாடங்களுக்கும் பொருத்தமான ஆசிரிய ஆளணியினர் காணப்படுவதில்லை. தற்போது சேவையிலுள்ள மூத்த ஆசிரியர்களிடம் காணப்படும் அறிவு, தேடல், அனுபவம், மனப்பாங்கு இளம் ஆசிரிய சமுதாயத்திடம் காணப்படவில்லை. இன்னும் ஐந்து வருடங்களின் பின் இது ஓர் பாரிய பிரச்சினையாக உருவெடுக்கலாம். மேலும் தனியார் கல்வி நிறுவனங்களிலும் மூத்த ஆசிரியர்களையே மாணவர்கள் நாடிச்செல்கின்றனர்.

**கேள்வி:-** புதியதாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள செயற்திட்ட அறிக்கையில் உண்மையிலேயே மாணவர்கள் மிகுந்த அக்கறை காட்டி வருகின்றார்களா?

**பதில்:-** புதிதாக அறிமுகம் செயயப்பட்ட செயற்திட்டம், மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து - நாட்டின் வளர்ச்சிக்கு அவற்றைப் பயன்படுத்த வழிகோல வேண்டும் என்ற நோக்கிலேயே அறிமுகப்படுத்தப்பட்டது. உடல், உள, சமூக ரீதியில் ஆரோக்கியமான சமுதாயம் ஒன்றை இதன் மூலம் உருவாக்க முடியும். ஆனால், மாணவர் இதனை உணர்ந்து ஆக்கபூர்வமாகத் தொழிற்படுவதற்காகத் தெரியவில்லை. சரியான வழிகாட்டல்கள் மேற்கொண்டபோதும் அவர்களது செயற்பாடு பயனுறுதி வாய்ந்ததாகக் காணப்படவில்லை.

**கேள்வி:-** தெற்கிலுள்ள பாடசாலைகளோடு ஒப்பிடும்போது எமது பிரதேசத்திலுள்ள பாடசாலைகளில் காணப்படும் வசதிகள் குறைவாகவே உள்ளன. எமது மாணவர்களுக்கும் அவ்வசதிகளை வழங்குகின்ற பொழுது, அவர்களது கல்வி நிலையில் மேலும் முன்னேற்றம் ஏற்படும் என நீங்கள் கருதுகின்றீர்களா? இதற்கான விளக்கம் தருவீர்களா?

**பதில்:-** நிச்சயமாக ஏற்படும். கற்றல் கற்பித்தலுக்கான பொருத்தமான சூழ்நிலை இல்லாவிடின் கல்வியின் தரத்தை மேம்படுத்த முடியாது. இன்று தென்னிலங்கையில் கல்வியின் தரம், பரீட்சைப் பெறுபேறுகள் அதிகரித்தமைக்கு மிகமுக்கிய காரணம் கற்பித்தலுக்கான சாதனங்கள் அதிகரிக்கப்பட்டமையே. நூலக வசதி, ஆய்வுகூட வசதி, கற்பித்தல் உபகரணங்கள் எனத் தென்னிலங்கையில் அரசு மேற்கொண்ட வசதிகள்போல யாழ்ப்பாணப்பகுதியில் மேற்கொள்ளப்படவில்லை.

**கேள்வி:-** தற்பொழுதுள்ள மாணவர்களுக்கு நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்?

**பதில்:-** மாணவர் தம் வருங்காலம் கல்வியிலேயே தங்கியுள்ளது என்பதை முதலில் உணரவேண்டும். கொஞ்சநேர சந்தோஷத்துக்காக வாழ்க்கையின் முழுநேர மகிழ்ச்சியை இழக்கக்கூடாது.

தமது வாழ்க்கைக்கு ஒரு குறிக்கோளை உருவாக்கிக்கொண்டவர்களாக மாணவர்கள் செயற்படவேண்டும். அவர்கள் கற்கும் கல்வியின் மூலம் அவர்களது தனிப்பட்ட எதிர்காலம் மட்டுமல்ல, சமூகத்தின் நல்வாழ்வும் அதிலேயே தங்கியுள்ளது என்பதை மாணவர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

**நேர்காணல்:- கா.பஞ்சரத்தினம்.**

# சத்தியம் வெல்லும்!

ஒரு தடவை பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்குமிடையில் மூண்ட யுத்தத்தில், தர்மம் பாண்டவர்களின் பக்கந்தான் இருக்கிறதென்பது பீஷ்மருக்குத் தெரியும். சர்வேஸ்வரனான கண்ண பரமாத்மா, பாண்டவர்களின் பக்கத்திலிருக்கும்




பொழுது தர்மமும் அங்குதானிருக்குமென்பதை பீஷ்மர் அறியாமலில்லை. என்றாலும் அவர்களை எதிர்த்துப் போர் புரிய வேண்டிய நிப்பந்தம் அவருக்கு உண்டாயிற்று. வாழ்நாள் முழுவதும் கௌரவர்களோடிருந்த அவர், யுத்த நெருக்கடியில் அவர்களைக் கைவிட்டுப் போவது தர்மமாகாது. தனது தர்மத்தைக் காப்பதற்காகக் கௌரவர்களின் அதர்மத்துக்கு அவர் பக்கபலமாயிருக்க நேரிட்டது. பாண்டவர்கள் வெற்றி பெற்றுத் தர்மம் தழைக்க வேண்டுமென்பதுதான் அவருடைய விருப்பமென்றாலும், அதற்காகத் தனது தர்மத்தைக் கைவிடவோ அல்லது தனது பராக்கிரம த்தை மட்டுப்படுத்திக் கொண்டு பாண்டவர்களின் வெற்றிக்கு வழி வகுத்துக் கொடுக்கவோ அவர் தயாரில்லை.

பீஷ்மருக்கு ஒருபுறம் கௌரவர்களிடம் வெறுப்பும், பாண்டவர்களிடம் விருப்பும், மற்றொருபுறம் கௌரவர்களை ஜெயிக்கச் செய்து பாண்டவர்களை தோற்கச் செய்யவேண்டிய மாபெரும் பொறுப்பு இருந்தது. இத்தகைய நெருக்கடியான சூழலில் அவர் தர்மத்தைக் காக்க வேண்டியிருந்தது. பீஷ்மர் உயிரோடு இருக்கும்வரையில் தாங்கள் ஜெயிக்க முடியாதென்பது பாண்டவர்களுக்குத் தெரியும். ஆனால், பீஷ்மரை ஜெயிக்க முடியவுமில்லை. அதோடு பீஷ்மரை வீழ்த்துவதாக அர்ச்சுனன் வேறு சத்தியம் செய்திருக்கிறான்.

"அர்ச்சுனா! நீ போய் பீஷ்மரை வணங்கி உன்னுடைய சத்தியம் பிழைக்க ஒரு வழி சொல்ல வேண்டுமென்றுகேள். சத்தியத்தைக் காப்பாற்ற அவர் எதுவும் செய்வார்! என்று அர்ச்சுனனுக்குச் சொல்லுகிறார் கண்ணன்.

அன்றைய போர் முடிந்ததும் அர்ச்சுனன் ஆயுதங்களைக் கழற்றி வைத்துவிட்டு எதிரிகளின் பாசறைக்குத் தனியாகப் போய் பீஷ்மரை வணங்குகிறான்.

அர்ச்சுனன் வந்து வணங்கு



வதைப் பார்த்த பீஷ்மர் அவனைத் தூக்கி நிறுத்தி - "குழந்தாய் அர்ச்சுனா! நலமாயிருக்கிறாயா? உன் சகோதரர்கள் எல்லோரும் நலமா? என்னை நாடி வந்த காரணம் என்ன?" என்று விசாரித்தார். அதற்கு அர்ச்சுனன் "தாத்தா, பாண்டவர்களாகிய எங்களுக்கு நீங்கள் தாத்தா மட்டுமல்ல, குருவும் தெய்வமும் ஆவீர்கள். இருந்தும் சத்திரிய தர்மப்படி உங்களுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டே உங்களோடு யுத்தம் செய்ய நாங்கள் ஆரம்பித்தோம். உங்களுடைய பராக்கிரமத்தை மும்மூர்த்திகளும் அறிவார்கள். இந்திரனே வந்தால் கூட உங்களைப் போர்க்களத்தில் ஜெயிக்க முடியாது. நீங்கள் உயிரோடு இருக்கும் வரையில் பாண்டவர்கள் ஜெயிப்பதென்ற பேச்சுக்கே இடமில்லை. கௌரவர்கள் தோல்வி அடைவதற்குமில்லை. உங்களை வீழ்த்துவதாக நான் சத்தியம் செய்திருக்கிறேன்.

சத்தியம் பிழைக்க என்ன வழி? உங்களை வீழ்த்தும் வழி என்ன? அதைச் சொல்லியருள வேண்டும்! என்று பிரார்த்தித்தான்.

பீஷ்மர் ஒருகணம் யோசித்தார். கண்ணனைத் தோழனாகக் கொண்ட அர்ச்சுனனின் சத்தியம் பிழைக்க வேண்டும். பாண்டவர்கள் பக்கம் உள்ள தர்மம் வெல்லவேண்டும். கௌரவர்கள் பக்கத்தில் உள்ள அதர்மம் அழிய வேண்டும். அதே சமயம் தன்னுடைய அதர்மத்துக்கும் பங்கம் ஏற்படக்கூடாது. இவைகளை யோசித்து ஒரு முடிவுக்கு வந்த பீஷ்மர், "அர்ச்சுனா! என் கையில் ஆயுதமிருக்கும் வரையில் எவராலும் என்னை ஜெயிக்க முடியாது. இந்தப் பூமியில் மனிதராகப் பிறந்த எல்லோருக்கும் மரணம் என்பது ஒன்றுண்டு. அதேபோல எனக்கும் மரணமுண்டு. என்னுடைய மரணம் நெருங்கிக் கொண்டிருப்பதை நான் அறிவேன். அந்த மரணம் உன்னால் ஏற்பட்டு உன்னுடைய சத்தியம் பிழைக்கட்டும். உங்கள் பக்கத்திலுள்ள தர்மமும் வாழட்டும். நான் ஜெயிக்கப்பட வேண்டும் என்பதற்காக என்னுடைய யுத்த முயற்சியைச் சிறிதும் தளர்வடையச் செய்யமாட்டேன். எத்தனை பயங்கரமாகப் போர் செய்ய முடியுமோ அத்தனை பயங்கரமாக நான் போராடத்தான் செய்வேன். உங்கள் பக்கம் உள்ள எத்தனை ஆயிரம் பேர்களைக் கொன்று குவிக்க முடியுமோ அத்தனை ஆயிரம் பேர்களைக் கொன்று குவிக்கத்தான் செய்வேன். பெண்கள் அல்லது பெண் தன்மையுடையவர்களை எதிர்த்துப் போராடுவதில்லை என்று நான் பிரதிக்ஞை செய்திருக்கிறேன். உங்கள் படையில் "சிகண்டி" என்று ஒரு சிற்றரசன் இருக்கிறான். அவன் பெண்ணாகப் பிறந்து ஆணாக மாறியவன். பிறவியில் அவன் பெண்ணென்பதும், பெண் தன்மையுடனிருப்பவன் என்பதும் எனக்குத் தெரியும். என்னை அழிப்பதற்காகவென்றே அவன் பிறந்தவன். உன்னுடைய தேரில் அவனை முன்னால் வைத்துக்கொண்டு யுத்தம் செய். என்னை அவன் தாக்க ஆரம்பித்தால் உடனேயே நான் ஆயுதத்தைக் கீழே வைத்துவிடுவேன். பெண் தன்மையுடைய அவனோடு நான் யுத்தம் செய்ய மாட்டேன். என் கையில் ஆயுதம் இல்லாத அந்தச் சமயம் பார்த்து என்னைக் கடுமையாகத் தாக்கு, அந்தக் கடுமையான தாக்குதல் என்னை வீழ்த்திவிடும். இதைத் தவிர என்னை ஜெயிக்க வேறுவழியில்லை!"

-இவ்வாறு பீஷ்மர் தன்னை வீழ்த்தத் தனது எதிரிக்கே யோசனை சொல்லி அனுப்புகிறார். அதுபோல் சிகண்டியை ரதத்தில் வைத்துக் கொண்டு அர்ச்சுனன் யுத்தத்தை ஆரம்பிக்க, பீஷ்மர் ஆயுதத்தை எறிந்து விடுகிறார். அந்தச் சமயம் பார்த்து அர்ச்சுனன் கடுமையான தாக்குதல் நடாத்தி பீஷ்மரைக் காயப்படுத்தி வீழ்த்துகிறான். இந்த யுத்த தர்மம் எங்கே? இன்றைய அணு குண்டு சகாப்த யுத்த தர்மம் எங்கே?

**- கவிமாமணி.**

## கிளிநொச்சியில் நிகொட் பணிமனை

நிகொட் நிறுவன பணிமனை கிளிநொச்சியில் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் இராசநாயகம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தமிழீழ தேசியக் கொடியை கல்விக் கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் ஏற்றி வைத்தார். இக்கட்டடத்தை நிகொட் நிறுவன திட்டப் பணிப்பாளர் லங்காநேசன் நாடாவை வெட்டி திறந்து வைத்தார்.

## கொடித்தோடை பற்றிய கருத்தரங்கு

கொடித்தோடை வளர்ப்பு மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் பற்றிய கருத்தரங்கு, நாளை மறுதினம் 26 ஆம் திகதி- விவசாய பீடத் தகவல் தொடர்பமையத்தினால், 262/7, 1ம் மாடி, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள, சமூக அபிவிருத்தி மன்றப் பணிமனையில் நடத்தப்படவுள்ளது.

எனவே, கொடித்தோடை செய்கையில் ஆர்வமுள்ளவர்களை இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

## விடியோ படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக புற நிலைப்படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில்- FAR AWAY SUNSET என்னும் ஜப்பானியத் திரைப்படமும், ALOKE BANERJEE, JAYDIP MUKHERJEE ஆகியோர் இயக்கிய குழந்தைத் தொழிலாளர்கள் பற்றிய ஆவணத் திரைப்படமான MILES TO GO எனும் திரைப்படமும் நாளை மறுதினம் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்து கொள்ளலாம் என, புற நிலைப்படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.

# இடதுசாரி அணிக்கு தலைமையேற்கும் நிலையில் ஜே.வி.பியே இருக்கின்றது

## ஜனாதிபதி சந்திரிகாவின் கருத்து இதுவாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கு வானொலி உபகரணங்களை அனுமதித்த விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகாவின் அங்கீகாரம் பெறப்படவில்லை என்று ஜனாதிபதியின் தரப்பில் குற்றச்சாட்டுத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்று முன்தினம் ஜனாதிபதியின் ஊடகப்பேச்சாளர் ஹரீம் பீரிஸ் இத்தகவலை வெளியிட்டார்.

வானொலி உபகரணம் புலிகளுக்கு அனுமதிக்கப்பட்ட விவகாரத்தில் ஜனாதிபதியின் அனுமதி பெறுவது கட்டாயமாகும். ஆனால், அவ்வாறு நடைபெறவில்லை எனத் தெரிவித்த ஹரீம் பீரிஸ்,

ஜே.வி.பியுடனான உறவைப் பலப்படுத்தும் விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா அக்கறையுடன் இருப்பதாகவும் தெரிவித்தார்.

ஜே.வி.பியுடனான உறவு மூலம் இடதுசாரிப் பாதையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் கொண்டு செல்வதற்கு வாய்ப்பு ஏற்படும் என்றும், லங்கா சமசமாசக் கட்சியை விட ஜே.வி.பியே இடதுசாரி அணிக்குத் தலைமை வகிக்கும் நிலையில் இருப்பதாக ஜனாதிபதி கருதுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (லி)

# வானமே கூரையாக இயங்கும் பளை மத்திய கல்லூரி

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பச்சிலைப்பள்ளியில் அமைந்துள்ள பளை மத்திய கல்லூரி எதுவித அடிப்படை வசதிகளும் இன்றி இயங்கிவருகின்றது.

இப்பிரதேசத்தில் உள்ள ஒரே ஒரு வளமான உயர்தர வகுப்புகளுடன் இயங்கிய இப்பாடசாலை, அண்மைக்கால யுத்த நடவடிக்கைகளால் முற்றாக சேதமடைந்துள்ளது.

தற்போது உடைந்த கட்டடங்கள் சூழ, வானமே கூரையாக இப்பாடசாலை இயங்கி வருகின்றமையால் மாணவர்கள் உளவியல் ரீதியாக பாதிப்படையக்கூடிய வாய்ப்பு உள்ளதாக நலன்விரும்பிகள் சுட்டிக் காட்டுகின்றனர். (9)

# வணிகர் கழக பணிமனையில் வர்த்தகத் தகவல் மையம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வணிகர் கழகப் பணிமனையில் வர்த்தகத் தகவல் மையம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. இன்று காலை 11 மணியளவில் இநநிகழ்வு இடம் பெறவுள்ளது.

ஜி.ரி.இசற். என்ரபிறைசஸ் குழுவின் அங்கத்தவர்களும் வர்த்தக சம்மேளனத்தைச் சேர்ந்த கைத்தொழிற் பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்கள் வர்த்தக தகவல் மையத்துக்குத் தேவையான கணினி மற்றும் உபகரணங்கள் அன்பளிப்புச் செய்யவுள்ளதுடன்,

வர்த்தக அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடலும் இன்று நடத்தப்படவுள்ளது. (ச,ரா)

## முறைசாராக் கல்வி இறுதிப் பரீட்சைகள்

யாழ்.கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவின் கடந்த ஆண்டிற்கான இறுதிப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

யாழ்.மத்திய கல்லூரியில்- கணினிப் பயிற்சிநெறியில் தோற்றிய மாணவர்களுக்கும், கோப்பாய் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில்- கலை, அலங்காரப் பயிற்சி பெற்றவர்களுக்கும் எதிர்வரும் 28 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் பரீட்சைகள் நடைபெறவுள்ளதாக வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ச)

## சைவசமய அறிவுப் பரீட்சை

வண்ணை-சாந்தையா மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தினரால் வருடாந்தம் நடாத்தப்படும் சைவசமய அறிவுப் பரீட்சை பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ளது.

சைவசமய அறிவுப் பரீட்சை- தரம் 1 தொடக்கம் 13 வரையிலான மாணவர் மட்டத்திலும், செயல் முறைப் போட்டி- வயது வேறுபாடின்றிச் சகலரும் பங்குபற்றும் வகையிலும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பரீட்சையிலும் போட்டியிலும் பங்குபற்ற விரும்புவர்கள்- "சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம்", 163, நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் தொடர்பு கொண்டு, மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 31 ஆம் திகதியாகும்.

## சமூக அபிவிருத்தி மன்றக் கூட்டம்

யாழ்ப்பாண சமூக அபிவிருத்தி மன்றத்தின் மாதாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள கட்டடத்தில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில்- பயன்தரு மரக்கன்றுகள் விநியோகிப்பதுடன் பயிர்ச் செய்கைபற்றிய விரிவுரைகளும் நடைபெறவுள்ளன. (ச)

## 'நாவலர் பாரம்பரியம்' சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக்கிழமைதோறும் நடைபெற்றுவரும் சொற்பொழிவுத் தொடரில் - இன்று வெள்ளிக்கிழமை நாவலர் பாரம்பரியம்" எனும் விடயம் தொடர்பாக இளைப்பாறிய அதிபர் அ.பஞ்சாட்சரம் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார்.

# எங்கள் நிலத்தில் நாங்கள் வாழ்வோம்

# ஓமந்தையில் நடந்த பொங்கல் போராட்டம்!

வெற்றி நிச்சயம் படை நடவடிக்கையின்போது வவுனியாவின் வடக்கிலிருந்து பல கிராமங்களின் மக்கள் இடம்பெயர்ந்தார்கள். இவர்கள் தமது சொந்த இடங்களை விட்டு வெளியேறிய நாள் தொடக்கம் இடம்பெயர்ந்தோர் முகாம்களிலும் உறவினர், நண்பர்களின் வீடுகளிலும் வாழ, மக்களின் வாழ்விடங்களில் படையினர் நிலைகொண்டனர்.

கடுமையான போர் நடைபெற்ற காலத்தில் தமது வாழ்விடங்களில் படையினர் நிலை கொண்டிருப்பது பற்றி மக்கள் வாய் திறக்கவில்லை. இன்றைய சூழ்நிலையில் தமது சொந்த இடங்களில் மீண்டும் வாழ்வதற்கான எண்ணத்தை மக்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இதனைச் சரியான முறையில் கவனமெடுத்து மக்கள் மீள்குடியமர்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுக்க வேண்டிய பொறுப்பை அரசு மேற்கொள்வது அவசியமாகும்.

கடந்த தைப்பொங்கல் நாளன்று தமது சொந்த வீடுகளில் மீண்டும் வாழ்வதற்கான எண்ணத்தை வெளிபபடுத்தும் வகையில் ஒரு விதமான போராட்டம் போன்று, படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள ஓமந்தை பிள்ளையார் ஆலயத்தில் தைப்பொங்கலைப் பொங்கி, எமது வீடுகளிலும் பொங்குவதற்கு அனுமதியைத் தாருங்கள் என்ற கோரிக்கையினை விடுவதான நிகழ்வை மக்கள் மேற்கொண்டனர்.

உயர் பாதுகாப்பு பிரதேசம் என்று படையினர் கூறுமிடங்களை விட்டு படையினரை வெளியேற்றி மக்களை மீண்டும் குடியமர்த்துவது பற்றி விடுதலைப்புலிகள் குரல் கொடுக்கின்றனர், மக்கள் இதில் அவ்வளவாக அக்கறை காட்டவில்லை என்று படையுயர் வட்டாரங்கள் கூறுவதற்கு ஆப்பு வைத்தாற்போல் ஓமந்தை பிள்ளையார் ஆலயத்தில் பொங்கல் நடைபெற்றது என்று கூறலாம்.

தமது சொந்த இடங்களில் மீண்டும் குடியேறுவதற்கான விருப்பத்தைத் தெரிவிக்கும் இந்தப் பொங்கல் வைபவத்திற்குப் பெருந்திரளாக மக்கள் வந்திருந்தனர்.

அத்துடன், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், இராஜகுகனேஸ்வரன், வவுனியா மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ், வவுனியா- செட்டிகுளம்- நெடுங்கேணி ஆகிய பிரதேசங்களின் பிரதேச செயலாளர்களும், அரச திணைக்களங்களை சேர்ந்த உயரதிகாரிகளும் வந்திருந்தனர்.

இந்த வைபவம் நடைபெறவிருப்பதை படையினர் தெரிந்திருந்த போதும்- இவ்வளவு பெருமெடுப்பாக மக்கள் வந்து தமது சொந்த இடங்களை விட்டு படையினரை வெளியேறுமாறு கோரிக்கை விடுத்து பொங்கலை நடத்துவார்கள் என்று படையினர் எதிர்பார்க்கவில்லை. இருந்தபோதும் பொங்கலுக்கான நீரை, நீர்த்தாங்கி மூலம் வழங்கினார்கள். தேவையான விறகை வழங்கினார்கள். சுற்றி வரப் பாதுகாப்பையும் வழங்கி- கண்ணிவெடிகளின் அபாயம் உள்ளது, ஆலயத்தை விட்டு வெளியே வேறு இடங்களிற்கு செல்ல வேண்டாமென்று உத்தரவிட்டார்கள்.

மக்களின் இந்த நடவடிக்கையினை அடுத்து, வவுனியா படைத் தலைமை வட்டாரங்களிலிருந்து அறிவிப்பொன்று விடுக்கப்பட்டது. ஓமந்தையை அண்டிய சில கிராமங்களில் மீள்குடியமர அனுமதிப்பதாகவும், இதற்காக கண்ணிவெடிகள் அகற்றப்பட வேண்டும்- அந்தப் பணி முடிவடைந்ததும் வீடுகளில் மக்கள் மீள்குடியமரலாம் என்று தெரிவிக்கப்பட்டதுடன், நொச்சிமோட்டை யினை அண்டிய சில கிராமங்களில் நெற்பயிர் செய்கைக்கு அனுமதிப்பதாகவும் கூறியுள்ளனர்.

கண்ணிவெடிகள் அகற்றுவதில் சிக்கலிருக்காது. காரணம் - படையினர்தான் இந்த இடங்களில் கண்ணிவெடிகளைப் புதைத்து வைத்தனர் என்பது ஒன்றும் மர்மமல்லவே. ஆகவே, உரிய வரைபடங்களைக் கொண்டு கண்ணிவெடிகள் அகற்றலாம்.

ஆனால், பிரச்சினை என்னவென்றால்- படையினர் தாம் நிலை கொண்டிருக்கும் பிரதேசங்களை விட்டகலாது, தாமும் இருந்து கொண்டே- மக்களையும் குடியமர வாருங்கள் என்று கேட்பது பொருத்தமற்ற செயலாகும்.

தாம் வெளியேறியோ வேறு இடங்களில் நிலைகொள்ளவோ நிதி இல்லை என்று கூறுபவர்கள்- மக்களின் வீடுகளில் இருக்கின்றோமே, அவர்கள் இருப்பிடங்களில்லாது, வாழ்வதற்கு நிதியில்லாது எவ்வளவு துன்பப்படுவார்கள்? என்பது பற்றி கருத்தில் எடுப்பதாகத் தெரியவில்லை.

உயர் பாதுகாப்புப் பிரதேசம் என்று தமது பாதுகாப்பைப் பார்ப்பவர்கள் மக்களின் பாதுகாப்பை கருத்திலெடுக்காமல் விடுகின்றனர். இதனால் மக்கள் தமது பாதுகாப்பைத் தாமாகவே தீர்மானிக்கும் நிலை உருவாகின்றது. ஈழ விடுதலைப் போராட்டம் வளர்வதற்கும் இது போன்ற அடக்குமுறைகளே காரணமாக இருந்தன என்றால் மிகையில்லை என்றே கூறலாம்.




போர் நிறுத்தம் வந்து ஓராண்டு கடந்து விட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டும் பதினொரு மாதங்களாகிவிட்டன. நூற்றி அறுபது நாட்களுக்குள் பொதுக் கட்டடங்களிலிருந்து படையினர் வெளியேற வேண்டுமென்று கோரப்பட்டிருந்தும் இதுவரை அது நிறைவேற்றப்படவில்லை. புரிந்துணர்வு ஒப்பந்தமே செயல் வடிவமாகாது தடுக்கும் இராணுவத் தரப்பின் முட்டுக்கட்டைகளில் இது மிக முக்கியமானதாகும்.

**வவுனியாவிலிருந்து கனகரவி**

வவுனியாவில் மட்டுமல்ல- தமிழர் தாயகப் பிரதேசங்கள் அனைத்திலிருந்தும் மக்களின் இயல்பு வாழ்விற்குத் தடையாகவிருக்கும் உயர் பாதுகாப்பு பிரதேசங்கள் அகற்றப்படவேண்டும்.

இதனைப் புரிந்துணராமல் போக்குக்காட்டினால், அமைதிவழியிலான தீர்வு முயற்சிகள் என்பதும் போக்குக் காட்டுவதாகவே அமையும் என்ற சந்தேகமே மக்களிடம் உள்ளது. இதனைத் தீர்த்து வைக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்க வெளிநாட்டுத் தூதுவர்களின் சந்திப்பு!

## நோர்வே ஏற்பாட்டில் இன்று கொழும்பில் நடைபெறும்

கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களை இணைத்து, வடகிழக்குக்கான புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளை ஒருமுகப்படுவத்துவதற்கான முக்கிய கூட்டமொன்றை நோர்வே ஒழுங்கு செய்துள்ளது.

இக் கூட்டத்தில் சிறான் பணிப்பாளர், அரச சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் பேனாட் குணதிலக ஆகியோரும் கலந்து கொள்கின்றனர்.

இந்த முக்கிய சந்திப்பு, இன்று காலை கொழும்பில் நடைபெறுவதாக கிளிநொச்சி சிறான் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதற்காக சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் நேற்று மாலை கொழும்பு பயணமானதாகவும் தெரியவருகின்றது.

இக் கூட்டத்தின் மூலம் வெளிநாட்டுத் தூதுவர்களிடையே சிறான் மேற்கொள்ளவுள்ள பணிகள் மற்றும் செயற்பாடுகள் குறித்து பூரண விளக்கமளிக்கப்படும் எனவும்,

வடகிழக்கு புனர்வாழ்வு மற்றும் புனரமைப்புப் பணிகளுக்கான உதவிகளை இணைந்து ஒரு சீராகப் பெற்றுக்கொள்ள வழிவகுக்கப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



உடதலவின்ன படுகொலை வழக்கில் விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஜெனரல் ரத்வத்த நீதிமன்றத்திலிருந்து நேற்று சிறைச்சாலை வாகனத்தில் கூட்டிசெல்லப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

## சதீஸ் நம்பியார் கொழும்பு வந்து சேர்ந்தார்

(கொழும்பு)

உயர் பாதுகாப்பு வலயத்தில் மீள்குடியமர்வு குறித்து மதிப்பீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக அழைக்கப்பட்டிருந்த இந்திய இராணுவ அதிகாரி சதீஸ் நம்பியார் இலங்கைக்கு வந்திருப்பதாகத் தெரியவருகின்றது.

# துரித மீள்குடியமர்வுக்கு உதவுமாறு பிரதேச செயலர்களுக்கு அழைப்பு

## செயலக மாநாட்டில் அரச அதிபர் விடுத்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் துரிதமாக மீள்குடியமர்வை மேற்கொள்வது தொடர்பாக, சிறான் அதிகாரிகளுக்கும் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்களுக்குமான கூட்டம் நேற்று நடைபெற்றது.

யாழ். அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்ற, யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையிலான இக் கூட்டத்தில், மீள்குடியமர்வு சம்பந்தமான தேவைகளை இனங்காணுவதற்காக அமைக்கப்பட்ட குழுவின் அங்கத்தவர்களும், யாழ்.மாவட்டத்தில் பணிபுரியும் பிரதேச செயலாளர்களும், யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுபபாளர் இளம்பரிதி மற்றும் யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் .

இக் கூட்டத்தில் மீள்குடியமர்வு சம்பந்தமான தேவைகளை இனங்காணுவதற்கு அமைக்கப்பட்ட குழுவினர் தமது செயற்பாடுகளை அந்தந்த பிரதேச செயலாளர்களுடன் இணைந்து இன்று முதல் மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இச்செயற்திட்டங்கள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினை என்பதால், இவற்றை உடனடியாக மேற்கொள்ள சகல பிரதேச செயலாளர்களும் தம்மாலான அனைத்து ஒழுங்குகளையும், உதவிகளையும் துரிதமாகச் செய்யுமாறு யாழ். அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

# தேவைகளை இனங்காணும் குழு விசேட படிவங்களை விநியோகிக்கும்

## மீள் குடியமர்வுக்காக தரவுகளைத் திரட்ட நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் துரித மீள்குடியேற்றத்தை நடைமுறைப்படுத்துவதற்கான விசேட செயற்குழுவின் கூட்டம், இரண்டாவது நாளாக நேற்றும் யாழ்.அரச செயலகத்தில் நடைபெற்றது.

சிறான் பணிப்பாளர் இரேனியஸ் செல்வின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தின்போது, மீள்குடியமர்வு சம்பந்தமான தேவைகளை இனங்காணும் குழுவின் செயற்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மீள்குடியமர்வு சம்பந்தமான தேவைகளை இனங்காணுவதற்கென விசேட படிவங்கள் அச்சிடப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு தரவுகள் சேகரிக்கப்படவுள்ளன.

இவ்விசேட செயற்திட்டத்தின்படி, மக்கள் ஓர் பிரதேசத்தில் மீள்குடியமரும்போது, அந்தப் பிரதேசத்திலுள்ள வைத்தியசாலைகள், பாடசாலைகள் மற்றும் சுகாதார, போக்குவரத்து, குடிநீர் சம்பந்தமான பிரச்சினைகளும் அந்தப்பிரதேசத்திலுள்ள வீடுகளின் விபரங்களும், மற்றும் பல அடிப்படை வசதிகள் குறித்தும் ஆராயப்படவுள்ளன.

இப்பணிகளை விரைவாகவும் துரிதமாகவும் மேற்கொண்டு இரண்டு வாரங்களில் பூர்த்தி செய்வதற்கும் நேற்றைய கூட்டத்தின்போது திட்டமிடப்பட்டது. (லி,ரா)

### ஆளில்லாத...

அத்துடன் அப்பகுதியில் திரண்டிருந்த ஏராளமான பொதுமக்களையும், படையினரும் பொலிசாரும் அவ்விடத்திலிருந்து அகற்றினர்.

இதையடுத்து அவ்விடத்தில் நண்பகல் 12.30 மணியளவில் தரையிறங்கிய 'பெல்' ரக உலங்கு வானூர்தியில் இரு விமானப்படை அதிகாரிகள் வந்து சேர்ந்தனர்.

இதையடுத்து, பலாலி விமானத் தளத்திலிருந்து வாகன அணியாக வந்த விமானப்படையினர், விமானத்தின் சிதைந்த பாகங்களை மீட்டுச் சென்றனர்.

இதேவேளை- விமானப்படைக்குச் சொந்தமான வேவு விமானம் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக விபத்துக்குள்ளானதாகவும், இது தொடர்பான விசாரணைகளை நடத்துவதற்காக விமானப்படை அதிகாரி கப்டன் கோலித குணதிலக தலைமையிலான மூன்று பேர் கொண்ட குழுவொன்று அங்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் விமானப்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் அஜித் விஜேசுந்தர தெரிவித்துள்ளார்.

### எம்.பிக்களின்...

தில் அமைச்சர் மகேஸ்வரன் உயர் பாதுகாப்பு வலயம் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக குறிப்பிட்டுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக ஆராய நம்பியார் பொருத்தமற்றவர் என்றும் அவருக்கு இங்குள்ள நிலை தெரியாது என்றும் தெரிவித்துள்ள அமைச்சர் மகேஸ்வரன், இவரது யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

### இராணுவம்...

உறுப்பினர் குழு நியமிக்கப்பட்டிருப்பதாகவும் இக்குழு விசாரணைகளை நடத்தி வருவதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவுடன் தான் தொடர்ந்து மூன்று சந்திப்புக்களை நடத்தப் போவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இச்சந்திப்புக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.


## மரண அறிவித்தல்

### கார்த்திகேசு கந்தசாமி
### (கமிலஸ்)

*( ஓய்வு பெற்ற உ.ப. அதிபர், யா/இமையாணன் அ.த.க.பாடசாலை)*

பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும், நெல்லியடியை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கந்தசாமி (கமிலஸ்) அவர்கள் நேற்று (22.01.2003) காலமாகிவிட்டார்.

அன்னார் லில்லிகிறேஸ் செல்வமணியின் அன்புக் கணவரும், செபநேசன் (ஆசிரியர் - யா/உடுப்பிட்டி அமெரிக்க மிசன் கல்லூரி), செல்வரதி, ருகுணன் (யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞானபீட இறுதியாண்டு மாணவன்) ஆகியோரின் அன்புத்தந்தையும், மெற்றில்டா ஸ்ரெலாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (23.01.2003) பிற்பகல் 3.00 மணியளவில் கீரிப்பல்லி சேமக்காலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
**சீ.ஜேசுநாயகம்.**
(மைத்துனர்)

*பருத்தித்துறை வீதி,*
*நெல்லியடி.*

(சி/519)


# பல்கலைக்கழக மாணவர்களின் பகிஷ்கரிப்பு தொடர்பாக இன்று முக்கிய கூட்டம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் மூன்றாவது நாளாக நேற்றும் விரிவுரைக்குச் செல்லாது பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

கடந்த 16 ஆம் திகதி உள்ளூர்ப்பததிரிகை ஒன்றில், யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் ராகிங்கில் ஈடுபட்டது தொடர்பாக வெளியான செய்தியின் உண்மை நிலையை வெளிப்படுத்தப் பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக்கோரி, கடந்த செவ்வாய் முதல் மூன்று கோரிக்கைகளை முன்வைத்து விரிவுரைகளை பகிஷ்கரிக்க ஆரம்பித்தனர்.

மூன்றாவது நாளாக மாணவர்கள நேற்றும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மேறகொண்டு வரும் பகிஷ்கரிப்பு போராட்டம் தொடர்பாக இன்று அனைத்துப் பீட மாணவர்களும் கூடி ஆராயவுள்ளதாகவும் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்று முடிவு செய்யவிருப்பதாகவும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் தெரிவித்துள்ளனர். (ச)

## யாழ்.செயலகத்தில் திறைசேரி அதிகாரிகள்

(யாழ்ப்பாணம்)

திறைசேரி அதிகாரிகளுக்கும் யாழ். அரச செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் கணக்காளர்கள், திட்டமிடல் பணிப்பாளர்களுக்குமான கூட்டம் ஒன்று நேற்று யாழ்.அரச செயலகத்தில் நடைபெற்றது.

அரச அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில், திறைசேரி உயர் அதிகாரிகள் 5 பேர் கலந்து கொண்டு அரச நிதிப்பிரமாணங்கள் குறித்து கருத்துரைகளை நிகழ்த்தினர்.

### சுவிற்சர்லாந்து...

அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் புலிகளின் சமாதானச் செயலணிப் பொறுப்பாளர் புலித்தேவனும் இக் கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

இலங்கைக்கான சுவிஸ் நாட்டுத் தூதுவர் பெர்னாவிகா தலைமையில் மனிதப் பாதுகாப்பு வள அமைச்சர் மற்றும் தூதரக அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக் கலந்துரையாடலில் அரசியற்துறைப் பொறுப்பாளர் கருத்துத் தெரிவிக்கையில்-

மக்களுக்கு இயல்பு நிலையை ஏற்படுத்தாது அடுத்த கட்ட அரசியல் பேச்சுக்குப் போவது மக்களை ஏமாற்றுவது போன்ற செயலாகும். ஒரு ஆண்டு காலமாகியும் மக்களின் இயல்பு நிலை வடக்கு-கிழக்கில் தோன்றவில்லை என்றும் குறிப்பிட்டார்.

உயர் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகளான- சிறான் அமைப்பு, விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தின் செயற்பாடுகள் ஆகியன பற்றியும், அதன் முன்னேற்றங்கள் பற்றியும் நேற்று கலந்துரையாடப்பட்டது.

### ராகிங்....

வேந்தர் தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் பல்கலைக்கழக அனைத்துப்பீட பீடாதிபதிகள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், அனைத்துப்பீட மாணவர் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தின்பின் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று துணைவேந்தர் தலைமையில் நடைபெற்றது.

கடந்த 16 ஆம் திகதி உள்ளூர் பத்திரிகையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ராகிங்கில் ஈடுபட்டதாக வெளியான செய்தியில் கூறப்பட்டிருந்தது போன்ற எந்தச் சம்பவமும் அந்தப் பகுதியில் நடைபெறவில்லை. இந்த செய்தி வெளியான பின் அந்த இடத்திற்கு சென்று நானும், பீடாதிபதிகளும், ஒழுக்காற்று உத்தியோகத்தர்களும் மற்றும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் தகவல் சேகரிக்கும் பணியில் ஈடுபட்டோம். எமக்கு இந்தச் சம்பவம் நடைபெற்றமை தொடர்பாக உறுதிப்படுத்தும் எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை என துணைவேந்தர் தெரிவித்தார்.

பத்திரிகைகள் எழுந்தமானமாக செய்திகளை பிரசுரிக்கலாம், அவற்றினை கருத்தில் எடுக்க வேண்டிய அவசியம் இல்லை எனவும்-

மாணவர்கள் மேற்கொண்டு விரிவுரைகளை பகிஷ்கரித்து வருவதால் அடுத்த மாதம் முற்பகுதியில் நடைபெறவுள்ள பரீட்சையில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது எனவும் துணைவேந்தர் மேலும் தெரிவித்தார். (ச)

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.49 | 96.90 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 155.67 | 156.97 |
| 1 யூரோ | 103.20 | 104.36 |
| 1 சுவிஸ் பிராங் | 70.43 | 71.54 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.50 | 57.48 |
| 1 ஜப்பானிய யென் | 00.81 | 00.82 |
| 1 சவூதி றியால் | 25.80 | 25.80 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.